பக்கங்கள்: 12
விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 12 வெள்ளிக்கிழமை 26.06.2020 கதிர் 233

## இனிது ரகசியம் அல்ல!

நாங்கள் வாக்களித்தால் கட்சிக்குப் பணம் கிடைக்கும். கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? ஆம். அது உண்மை.

இந்த நடைமுறை நீண்ட காலமாக உள்ளது. ஆனால் பலருக்கும் தெரியாது.

ஒரேயொரு பக்கம் 02 »

# 2010 ஆக அதிகரித்தது கொரோனாப் பாதிப்பு

கொழும்பு, ஜுன் 26

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று 09 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனாத் தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 2010 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேலும் 40 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதன்படி குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,602 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனா பக்கம் 02 »

# ‘19’ திருத்தத்துக்கு முடிவுகட்டவே மூன்றிலிரண்டு கோருகின்றோம்

### உண்மையைக் கூறியது மஹிந்த அணி

கொழும்பு, ஜுன் 26

பல்வேறு தரப்பினரால் விமர்சிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கி நாட்டுக்கு பொருத்தமான முறையில் அரசமைப்பு திருத்தத்தை உருவாக்கவே புதிய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கோருகின்றோம். நிறைவேற்றுத்துறையைப் பலவீனப்படுத்தவே 19ஆவது திருத்தம் சூட்சுமமான முறையில் கொண்டு பக்கம் 02 »



# கருணா அம்மானுடன் ஒப்பிடும்போது கூட்டமைப்பின் துரோகம் படுமோசம்!

### இப்படிச் சீறுகின்றது ராஜபக்ஷ அணி



கொழும்பு, ஜுன் 26

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் அம்பாறையில் ஆற்றிய சர்ச்சைக்குரிய உரையால் அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய ராஜபக்ஷ அரசுக்கும் நாட்டுக்கும் அவர் துரோகமிழைத்துவிட்டார். ஆனால், கருணா அம்மானின் துரோகத்தைவிடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த நாட்டுக்குச் செய்த - செய்துகொண்டிருக்கின்ற - துரோகம் படுமோசமானது.

-இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார். 02 »

# ‘யானை’யின் ஆட்டம் ஞாயிறன்று ஆரம்பம்

கொழும்பு, ஜுன் 26

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசார நடவடிக்கை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமாகும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுடன், மாவட்ட மற்றும் தேர்தல் தொகுதி மட்டங்களிலான பிரசாரங்கள் நவீன தொழிநுட்பத்தினூடாக ஜுலை 4ஆம் பக்கம் 02 »

# ஏழு மணி நேரம் நேற்று விசாரிக்கப்பட்ட கருணா



கொழும்பு, ஜுன் 26

கருணா அம்மான் எனப்படும், முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் 7 மணி நேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத் பக்கம் 02 »

# நல்லாட்சியின் பைத்தியத்தனமான உருவாக்கம்தான் 19ஆவது திருத்தம்

### விசர்ப்பிடித்தவர்களே அதை ஏற்படுத்தினர் என்கிறார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, ஜுன்.26

இலங்கையின் 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் பைத்தியகாரத்தனமான அரசமைப்புச் சட்டம் எனவும், அதனை மாற்றியமைக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்த அரசமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும். இது நல்லாட்சி அரசு பக்கம் 02 »



# தேர்தலின் பின் ரணில் தலைமையில் ஐ.தே.க. ராஜபக்ஷ அரசுடன் சங்கமம்!

### லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன நம்பிக்கை

கொழும்பு, ஜுன் 26

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் ராஜபக்ஷ அரசுடன் கூட்டணியாக இணையும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ள நிலையில், அரசை அமைக்க எவரது ஆதரவும் தேவையில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பக்கம் 02 »

# இதுவரை யாழ்ப்பாணத்தில் 22 தேர்தல் விதிமுறை மீறல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுன் 26

யாழ்ப்பாணத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து நேற்று வரை ஒரு தேர்தல் வன்முறை சம்பவம் உட்பட 22 தேர்தல் விதிமுறை மீறல் முறைப்பா டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி.அமலராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட்தான் பின்னர் இன்றுவரை 22தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப் பக்கம் 02 »

# நவீன் ஒரு விஷமி!

கொழும்பு, ஜுன் 26

ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுப்படுத்தியது நவீன் திஸாநாயக்கதான் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பூண்டுலோயா கயப்புக் கலை பகுதியில் பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம் என்னவென்றால் ஒரு வாக்குக்கு எவ்வளவு வெகுமதி தெரியுமா? அது நாற்பது வருடங்களுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட தொகை.ஒரு வாக்குக்கு ஐம்பது சதம்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஐம்பது சதத்தின் பெறுமதி உயர்வானது. இன்று அது ஒரு தம்படிக் காசுக்கு மதிப்பில்லாத விடயம். காலம் மாறி விட்டது. ஆனால் தொகையை மாற்றும் விதத்தில் சட்டம் மாற்றப்படவில்லை.

1981ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவு ஆக பொதுத் தேர்தலுக்கு மட்டுமே பொருந்தும். ஜனாதிபதித் தேர்தலுக்கோ, மாகாண சபைத் தேர்தலுக்கோ அல்லது உள்ளூராட்சித் தேர்தலுக்கோ பொருந்தாது.

அதுவும் நடைபெறும் பொதுத் தேர்தலில் மொத்த வாக்குகளில் ஒரு சதவீதத்துக்கும் அதிக வாக்குளைப் பெற்ற கட்சிகளுக்கு மட்டுமே இந்தக் கொடுப்பனவு.

கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட கட்சி அடுத்து வரும் இந்தப் பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டால்தான் இந்தக் கொடுப்பனவு கிடைக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி போன பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. இந்த முறை இல்லை. அதனால் அதற்கு இல்லை.

பொதுஜன பெரமுன இந்தத் தடவைதான் முதல் தடவையாகப் போட்டியிடுகிறது. சஜித்தின் கட்சியும் அப்படித்தான். அதனால் அவற்றுக்கும் கொடுப்பனவு ஏதும் இல்லை.

கடந்த பொதுத் தேர்தலில் 50 இலட்சம் வாக்குகளை ஐ.தே.கட்சி பெற்றது. அதனால் அதற்கு 25 இலட்சம் ரூபா இந்தத் தேர்தல் ஒட்டி சுளையாகக் கிடைக்கும்.

5 இலட்சத்து 15 ஆயிரம் வாக்குளைப் பெற்ற இலங்கைத் தமிழரசுக்கு 2 இலட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபா வரைத் தேறும்.

அது போல ஐந்து இலட்சத்து 43 ஆயிரம் வாக்குளைப் பெற்ற ஜே.வி.பிக்கும் 2 இலட்சத்து 71ஆயிரம் ரூபா வரை கிட்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எல்லாம் ஒரு வீத வாக்குகளை எட்டவில்லை. அதனால் அவற்றுக்கு எந்தக் கொடுப்பனவும் இல்லை.

கடந்த 2015 பொதுத் தேர்தலில் செல்லுபடியற்ற வாக்குகள் 5 இலட்சத்து 17 ஆயிரம். மொத்த வாக்குகளில் 4.4 வீதம்.

கடந்த தடவை மொத்தமாக 3 இலட்சத்து 85 ஆயிரம் வாக்குகளுக்குத்தான் ஒரு தேசியப்பட்டியல் எம்.பி. பதவி கிட்டியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை முழுதாக 3 இலட்சத்து 85 ஆயிரம் வாக்குகளுக்கு முதல் தேசியப் பட்டியல் எம்.பியும் –

மிகுதியான சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வாக்குகளுக்கு எஞ்சிய – பிரித்து மிஞ்சுகின்ற – இடத்துக்கு ஓர் எம்.பியும் –

என இரண்டு ஆசனங்கள் கிடைத்தன.

அப்படிப் பிரித்து மிஞ்சுவதில் இரண்டாவது ஆசனம் இந்த எண்ணிக்கைக்கு ஒவ்வொரு முறையும் கிடைப்பது என்பது துர்லபமே.

அத்தோடு இம்முறை கூட்டமைப்புக்குக் கடந்த தடவை கிடைத்த வாக்குகளை விட சற்றுக் குறைவான வாக்குகளே மொத்தமாகக் கிடைக்குமாயின் இரண்டாவது தேசியப் பட்டியல் எம்.பி. என்பது பெரும்பாலும் 'டவுட்' அல்லது 'அவுட்'தான்!

தேசியப் பட்டியல் இடம் ஒன்றுதான் என்றால் அதற்கான போட்டியும் குழப்பமும் கூட்டமைப்புக்குள் எகிறும்.

என்ன செய்யப் போகிறது கூட்டமைப்பு?

பார்த்திருப்போம்....!

–மின்னல்–

## 2010 ஆக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 397 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 36 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## கருணா அம்மானுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவில் ஒரே இரவில் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரைத் தாம் படுகொலை செய்தார் எனத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த கருணா அம்மான் ஆற்றிய சர்சைக்குரிய உரை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கருணா அம்மானைத் தண்டிப்பதா? இல்லையா? என்று நீதிமன்றம்தான் இறுதி முடிவு எடுக்கும். இதில் அரசு தலையிட முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தவிசாளர் ஒருவரின் அறிக்கைக்கு கருணா அம்மான் பதிலடி கொடுத்து உரையாற்றும்போதுதான் ஆனையிறவு சண்டையையும் அதில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் விடயத்தையும் நினைவுபடுத்தியுள்ளார்.

உண்மையில் கருணா அம்மான் இப்போது அரசுக்கோ அல்லது சிங்கள மக்களுக்கோ சவால் அல்லர். அவர் கடந்த காலப் போரை நினைவுபடுத்தி மட்டுமே பேசியுள்ளார். எனினும், ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைத் தாம் கொன்றார் என அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளமை பாரதூரமான விடயம். இப்படி அவர் பேசுவதற்கு இப்போது எந்த உரிமையும் இல்லை. அவரை நாம் நம்பித்தான் பிரதி அமைச்சுப் பதவியையும் வழங்கியிருந்தோம். ஆனால், அவர் இப்போது துரோகமிழைத்துவிட்டார்.

ஆனால், கருணா அம்மானின் துரோகத்தைவிடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் துரோகம் படுமோசமானது. அவர்கள் இப்போதும் இந்த நாட்டைத் துண்டாடும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். 'சமஷ்டி' ஊடாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தனி நாட்டுக் கனவை நிறைவேற்றக் கூட்டமைப்பினர் படாதபாடு படுகின்றார்கள். ஆனால், இதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்கவே மாட்டாது – என்றார்.

## நல்லாட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வந்த பைத்தியகாரத்தனமான அரசமைப்புச் சட்டம். இது விசர்ப்பிடித்தவர்கள் உருவாக்கிய விசர்த்தனமான அரசமைப்பு. இதுதான் உண்மையான கதை. இதனை மாற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை – என்றார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை பைத்தியகாரத்தனமான அரசமைப்புச் சட்டம் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விமர்சித்தாலும் அவர் உட்பட அவர் சார்ந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடனே இந்த திருத்தச் சட்டம் கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசப்புத் திருத்தச் சட்டம் உட்பட முழு அரசமைப்புச் சட்டத்தை பாதுகாப்பதாகக் கூறியே சத்தியப் பிரமாணம் செய்துக்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்ட விதிகளை மீறியமைக்கான முறைப்பாடுகள் ஆகும். எனினும் ஒரேயொரு தேர்தல் வன்முறைச் சம்பவம் பதிவாகியுள்ளது. அது அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவனத் தாக்குதல் சம்பவம். இதனை விட பாரிய சம்பவங்கள் எவையும் இதுவரை பதிவாகவில்லை.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கவனத்தில் எடுத்து அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் சுகாதார முயறைகளைப் பின்பற்ற வேண்டும். அதேபோல வாக்காளர்களும் சுகாதார முறைகளைப் பின்பற்றுவது அவசியமானது ஒன்றாகும். தேர்தல் சட்ட விதிகளை மீறி வைக்கப்பட்டுள்ள பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன. நிவாரணப் பொருள்கள் வழங்கிவிட்டு வேட்பாளர்கள் அதனை முகப்புத்தகத்தில் பதிவிட்டாலும் அதுவும் தேர்தல் விதிமுறை மீறலே. எனவே வேட்பாளர்கள் தேர்தல் சட்டத்தை மதித்து ஜனநாயக தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்– என்றார்.

# 11 இளைஞர்களை கடத்திக் காணாமலாக்கியமை:

# 'ட்ரயல் அட் பார்' விசாரணைக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்று தடை உத்தரவு

பதினொரு தமிழ் இளைஞர்களைக் கடத்தி, கப்பம் கோரி, காணாமலாக்கிய சம்பவம் தொடர்பில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றத்தின் 'ட்ரயல் அட் பார்' நடத்தி வழக்கு விசாரணைக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.

மேற்படி வழக்கின் எதிரியான முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை விசாரணக்கு ஏற்ற பின்னர் இந்த உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடு மீதான விசாரணை முடிவுக்கு வரும் வரை இந்த இடைக்கால தடை நடைமுறையில் இருக்கும் எனவும் மேல்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்தது.

2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 17 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வந்தது.

அதன்படி முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கடற்படையைச் சேர்ந்த சம்பத் முனசிங்க, டி.கே.பி.தஸநாயக்க, சுமித் ரணசிங்க, லக்ஷமன் உதயகுமார, நளின் பிரசன்ன விக்ரமசூரிய, தர்மதாஸ, ராஜபக்ஷ கித்சிரி, கஸ்துரிகே காமினி, அருண துசார மென்டிஸ், வசந்த கரன்னாகொட ஆகியோர் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டதுடன் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கிற்கே இப்போது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஏழு மணி நேரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகமான 4 ஆம் மாடிக்கு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆஜராகிய கருணா அம்மானிடம் மாலை 5.30 மணி வரை விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. சி.ஐ.டி.யின் விடே விசாரணைப் பிரிவின் முதலாம் இலக்க விசாரணை அறையின் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயாகல தலைமையிலான சிறப்புக் குழு, உதவி பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் வழி நடத்தலில் இந்த விசாரணைகளை முன்னெடுத்தது.

இதன்போது கருணா அம்மானிடம் சி.ஐ.டி. விடே வாக்கு மூலம் ஒன்றையும் பதிவு செய்ததுடன், அவசியம் ஏற்படின் மீள விசாரணைக்கு அழைப்பதாகவும் தெரிவித்துள்ளது.

## தேர்தலின் பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமோக வெற்றியைப் பெறும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்று முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

## நவீன் ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எமது தமிழ் முற்போக்குக் கூட்டணி இணைந்து செயற்பட்டது. ஆனால், நவீன் திஸாநாயக்க போன்ற சில விஷமிகளின் தாக்கத்தால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலக வேண்டிய தேவை ஏற்பட்டது.

தற்போது சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுகின்றோம். நிச்சயம் வெற்றி பெறுவோம் – என்றார்.

## 'யானை'யின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி முதல் முன்னெடுக்கப்படவுள்ளன என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இவ்வாறான மக்கள் சந்திப்புக்களில் கலந்துகொள்பவர்கள் குறித்து தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தைக் கவனத்தில்கொண்டு செயற்படுமாறு ரணில் விக்கிரமசிங்க கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சர்வமத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.

அதற்கமைய அவர் இத்தேபானே தம்மாலங்கா தேரர், பெல்லன்வில ரஜமகா விகாரையின் விகாராதிபதி பெல்லன்வில தம்மரத்ன தேரர், பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## '19' திருத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்டது.

– இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்று அதிகாரத்தைப் பலவீனப்படுத்தவே உருவாக்கப்பட்டது. முத்துறைக்கும் இடையில் அதிகார ரீதியில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றமையால் கடந்த அரசின் அரச நிர்வாகம் கேள்விக் குறியாக்கப்பட்டது. இதன் தாக்கம் இன்றும் தொடர்கின்றது. 19ஆவது திருத்தம் அனைத்துத் தரப்பினரினதும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது.

19ஆவது திருத்தத்துடன் தொடர்ந்து அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது. இதன் காரணமாகவே புதிய நாடாளுமன்றத்தில் இந்தத் திருத்தத்தை நீக்கி நாட்டுக்கும், அரச நிர்வாகத்தக்கும் பொருந்தும் விதத்தில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவர புதிய அரசில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவைக் கோருகின்றோம்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசியல் ரீதியில் இன்னும் பல விடயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். கொழும்பு மாவட்டத்தில் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்று அவர் குறிப்பிடுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியே பல தசாப்த காலமாக கொழும்பு மாவட்டத்தில் ஆட்சி புரிகின்றது என்தை அவர் மறந்துவிட்டார்.

கொரோனா வைரஸ் பரவலை வெற்றி கொண்டிருந்தாலும் தேசிய பொருளாதாரத்தை நாம் இன்னும் முன்னேற்றவில்லை. தேசிய வருமானத்தை ஈட்டித் தரும் மார்க்கங்கள் அனைத்தும் தற்போது தடைப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை, எரிபொருள் விலை ஆகியவற்றை எவ்வாறு குறைப்பது? ஆகவே, எதிர்த்தரப்பினர் நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும் – என்றார்.

## சிங்களக் கட்சிகளில் இருக்கும் தமிழர்களை விடுத்து

# தமிழ்த் தேசியத்துக்காகப் போராடும் முன்னணியை இலக்கு வைப்பது ஏன்?

### திருமலையில் சம்பந்தர் தரப்பினரின் போக்குக் குறித்து கஜேந்திரன் கேள்வி



**(பிரபாகரன் டிலக்சன்)**

பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளில் உள்ள தமிழர்களைப் பிரித்து எடுத்து அக் கட்சிகளை பலவீனப்படுத்தாமல் தமிழ் தேசியத்தில் உறுதியாக உள்ள எங்களுடைய தரப்பை அழிக்க நினைப்பது ஏன் என்பதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் பேரின்பவரதன் லக்ஸ்மன் முன்னணியில் இருந்து விலகி தமிழ் தேசியக் கூட்டமைப்பினரோடு இணைந்தமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் பேரின்பவரதன் லக்ஸ்மன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் கபளீபரம் செய்யப்பட்டுள்ளார். குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இதனோடு தொடர்புபட்டிருக்கிறார். கடந்த 70 வருடங்களாக திருகோணமலை மாவட்டத்தை அழித்து, சிங்களக் குடியேற்றங்களை நிறுவி, பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளோடு பயணிக்கின்ற தமிழர்களை அக் கட்சிகளில் இருந்து வெளியில் எடுத்துத் தங்களோடு இணைப்பதற்கான எதுவித முயற்சிகளையும் சம்பந்தன் மேற்கொள்ளவில்லை.

மாறாக பௌத்த மயமாக்கல், சிங்களக் குடியேற்றங்கள், பயங்கரவாத தடைச் சட்டம் போன்றவற்றுக்கு எதிராகவும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் தொடர்ந்து போராடுகின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே எமது வேட்ப்பாளர் கபளீபரம் செய்யப்பட்டுள்ளார். இது ஒரு அநாகரிகமான செயல்படாகவே நாம் பார்க்கின்றோம். இவை அனைத்தையும் நாங்கள் முறியடித்து முன்னோக்கி செல்வோம். - என்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் ஒரு தொகை நிதியைப் பெற்றுக்கொண்டே கட்சி தாவினார் என முன்னணியின் ஆதரவாளர்களினாலேயே முகநூலில் கருத்து தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் அவரிடம் வினாவியபோது தான் அது தொடர்பில் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என அவர் பதிலளித்தார்.

# கருணாவின் அறிவிப்பை விடவும் ஹரினின் கருத்து பாரதூரமானது

### இருவரும் கைதுசெய்யப்பட வேண்டும் என விமல் வலியுறுத்து

கருணாஅம்மானின்அறிவிப்பை விடவும்ஹரின்பெர்ணான்டோவின் கருத்து மிகவும் பாரதூரமானது. இருவரும் கைதுசெய்யப்பட வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ.

புனர்வாழ்வின் பின்னர் சமூகமயப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள், கடந்த காலங்களில் இழைத்த தவறுகள் தொடர்பில் தற்போது வீரவசனம் பேசினால் அவர்கள் நிச்சயம் கைதுசெய்யப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்திக் கூறினார்.

சிங்கள தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, கருணா அம்மான் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கருணாவின் கருத்தானது மிகவும் பாரதூரமான அறிவிப்பாகும். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த 14 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர். பெரும்பாலும் சிங்கள மக்கள் மற்றும் இராணுவத்தினரை கொன்றவர்களே இவர்கள். இவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தியது தவறு கிடையாது.

ஆனால், இவ்வாறு புனர்வாழ்வு பெற்று சென்றவர் மேடையேறி, இவ்வளவு இராணுவத்தினர், இவ்வளவு சிங்கள மக்கள், இவ்வளவு பிக்குகளைக் கொன்றேன் எனக் கூறினால் அந்நபரைக் கைதுசெய்ய வேண்டும்; அவரிடம் விசாரணை நடத்தப்படவேண்டும். அவரால் இவ்வாறு கூறமுடியாது. தவறிழைத்திருக்கலாம். ஆனால், அதனை வீர தீரச்செயல் என தற்போது அறிவிக்க முடியாது. அதற்கு நிகரானதொரு தவறையே கருணா அம்மான் செய்துள்ளார்.

கருணா அம்மானைப் பாதுகாப்பதற்கு நான் முற்படவில்லை. சி.ஐ.டியினர் விசாரணை நடத்தி வருகின்றனர். அதேபோல் கருணா அம்மானின் அறிவிப்பை விடவும் ஹரின் பெர்ணான்டோவின் கருத்து



மிகவும் பாரதூரமானது. இருவரும் கைதுசெய்யப்பட வேண்டும் – என்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ராஜபக்ஷக்களின் பிரசாரப் பீரங்கியாகச் செயற்பட்டார் என்ற விதத்தில் முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைக்க வேண்டிய கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் வாக்குகளைப் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையே தடுத்தார் எனவும் அவர் குற்றம்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொலன்னாவைக் கால்வாய்த் திட்டம்; பிரதமர் மஹிந்தர் நேரில் ஆராய்வு

கொழும்பில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் ஒரு கட்டமாக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும்தாழ்நிலங்கள் அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து மேற்கொண்டு வரும் கொலன்னாவை கால்வாய் அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆராய்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை முற்பகல் கொலன்னாவையைச் சூழவுள்ள பிரதேசத்திற்குக் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன் போது, பிரதமர் நாகலகம் வீதியில் நிர்மாணிக்கப்படும் நீரேற்று நிலையத்தைப் பார்வையிட்டமையுடன், நீரேற்று நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பாக திட்டத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் ஏ.எச். தூரியிடம் கேட்டறிந்து கொண்டார்.









# வலி. வடக்கில் இடம்பெயர்ந்தோருக்கு மயிலிட்டியில் வாக்களிப்பு நிலையங்கள்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு இம்முறை மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்தில் வாக்களிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வலி. வடக்கின் விடுவிக்கப்படாத பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் வாக்களிப்பதற்காக மயிலிட்டி கலைமகள் வித்தியாலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

கலைமகள் வித்தியாலயத்தில் 4 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு இப் பகுதி மக்கள் வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதே நேரம் இந்த மக்களுக்கு கடந்த காலங்களில் மல்லாகத்தில் வாக்குச் சாவடி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உரிமையா? விடுதலையா?

ஈழத் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு தொடர்பாக புதிய சிந்தனைச் சர்ச்சை ஒன்றைக் கிளப்பியிருக்கின்றார் அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம்.

இந்த விடயங்களை மிக நீண்ட காலமாக - திரும்பத் திரும்ப - அவர் சுட்டிக்காட்டி வலியுறுத்தி வருகிறார் எனினும், இப்போது தேர்தல் சமயத்தில் அது முக்கியத்துவம் பெறுகின்றது.

அதுவும் தமிழர் தரப்பில் பல்வேறு அரசியல் கட்சிகளும்,தரப்புகளும் தேர்தலை ஒட்டித் தங்களது கொள்கை நிலைப்பாட்டை வெளியிடவிருக்கும் இச்சமயத்தில் இந்தச் சர்ச்சை முக்கியமானதாகின்றது.

இது விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளும் தரப்புகளும் தங்களின் நிலைப்பாட்டை தங்களது தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பகிரங்கப்படுத்தவும், தெளிவுபடுத்தவும் வாய்ப்புக் கிட்டியிருப்பதால் இந்தச் சமயத்தில் இது மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

தமிழர்களின் போராட்டத்தில் அடிப்படைக் கோட்பாடு சம்பந்தமான நுணுக்கமான - நுட்பமான - கருத்தியல் சர்ச்சை இந்த விவகாரத்தில் இருப்பதால், தேர்தலை ஒட்டிய கொள்கை நிலைப்பாட்டு வாதப் பிரதிவாதங்களில் இந்த விடயமும் கவனிப்புக்குரியதாகின்றது.

இரண்டு விடயங்களை ஆய்வாளர் யோதிலிங்கம் முன்வைக்கின்றார்.

ஒன்று - தமிழ் மக்கள் சிறுபான்மை இனமல்லர்; அவர்கள் ஒரு தேசிய இனம்.

அடுத்தது - தமிழர் தேசம் கோருவது உரிமைகள் அல்ல; விடுதலையே.

இந்த இரண்டுமே சர்ச்சைக்குரிய விடயங்கள்தான்.

தமிழ் மக்கள் தங்களைத்தாங்களே 'சிறுபான்மையினத்தவர்கள்' என்று குறிப்பிடக் கூடாது. இந்த இலங்கைத் தீவின் 'தேசிய இனம்' என்றே அழைக்க வேண்டும் என்று ஆய்வாளர் யோதிலிங்கம் ஆதங்கத்தோடு குறிப்பிடுகின்ற விடயத்தில் புதைந்துள்ள உள்ளுணர்வு புரிந்து கொள்ளத் தக்கதே.

தமிழர்களின் எழுபது ஆண்டு கால போராட்டமே அவர்கள் 'தேசிய இனம்' என்ற அடிப்படையிலும், அந்த உரித்துடன் கூடிய உணர்விலும் எழுந்ததுதான்.

எனினும் ஜனநாயகத்தின் அடிப்படையான அட்சரகணித எண்ணிக்கை என்ற பார்வையிலே, மற்றொரு தேசிய இனத்தவர்களின் பக்கத்தே மிக சொற்ப எண்ணிக்கையில் தமிழர் தரப்பு இருப்பதனாலேயே நாம் அடக்கப்படுகின்றோம் என்பதே யதார்த்த நிலைமை.

நமது அரசியல் கட்டமைப்பு முறைமை ஜனநாயகம் என்ற பின்னலிலேயே வனையப் பெற்றுள்ளது. அதில் எண்ணிக்கைக்குத்தான் முக்கிய இடம். பிரதான உரித்து. அதனடிப்படையில் சிங்களவர் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள். அதனால் அவர்கள் பெரும்பான்மையினர் என்றும், எண்ணிக்கையில் சொற்ப தொகையினரான தமிழர்கள் சிறுபான்மையினர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சிறுபான்மையினர் என்பது 'தேசிய இனம்' என்ற உரித்தை மறுதலிப்பதாக அர்த்தப்படுமா என்றால், இல்லை என்றே கூறவேண்டும்.

ஆக, யோதிலிங்கத்தின் முதலாவது ஆதங்கத்தை நிறைவு செய்யும் விதத்தில் தமிழர்களாகிய நாம் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தாலும், இந்தத் தீவின் பூர்வீகத் தேசிய இனம் என்பதைத் தொடர்ந்து அவ்வப்போது வலியுறுத்தி நிற்பதன் மூலம் எம்மை நாமே உணர்வூட்டிக் கொள்ளலாம்.

அடுத்தது - நாம் இப்போது நடத்தும் போராட்டம் உரிமைக்கானதா? விடுதலைக்கானதா? - என்ற கேள்வி.

நிச்சயமாக, தமிழ் மக்களின் தேசியத் தலைவர் பிரபாகரன் முன்னெடுத்தது விடுதலைக்கான போராட்டம்தான்.

இன்று நிலைமை வேறு. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் 'ஐக்கியப்பட்ட - ஒன்றுபட்ட - ஒருமித்த - பிரிக்க முடியாத - இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கான' ஆணையையே வழங்கியுள்ளனர் என்பதும் -

அவர்கள், பிரிவினைக்கான 1976 ஆம் ஆண்டின் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தையும், 1977 பொதுத்தேர்தலின் மூலம் அதற்கு வழங்கிய ஆணையையும் திரும்பப் பெற்று விட்டனர் என்பதும் -

தமிழர்களை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிலைப்பாடு.

அதுதான் உண்மை என்றால் விடுதலைக்கான போராட்டம் 'அவுட்'! உரிமைகளுக்கான போராட்டம்தான் தொடருகின்றது என்பது அர்த்தம்.

தமிழ் மக்களிடம் இந்தத் தேர்தலில் வாக்கு யாசகம் கேட்டு வந்திருக்கும் தமிழர் தரப்புகளும் கட்சிகளும் இவ் விடயத்தில் தங்களின் நிலைப்பாட்டை இப்போது பகிரங்கப் படுத்தித் தெளிவுபடுத்தினால் நல்லது.

# தேர்தல் பிரசாரத்திற்காகத் தெரிவித்தவற்றை பூதாகாரமாக்குவதில் அர்த்தமும் ஏதுமில்லை

## நிலைமையைச் சமாளிக்க கருணா முயற்சி



தேர்தல் பிரசாரத்திற்காக நான் தெரிவித்த கருத்துக்களை பூதாகாரமாக்குவதில் எந்த அர்த்தமும் இல்லை என கருணா அம்மான் எனப்படும் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தாம் தெரிவித்திருந்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக நேற்று வியாழக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் காலை முன்னிலையாகிய அவர் 7 மணிநேர நீண்ட வாக்குமூலம் அளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்-

நான் நடந்த உண்மையைக் கூறியிருக்கின்றேன். எதுவித தவறான கண்ணோட்டத்திலும் எதுவும் நான் கொடுக்கவில்லை. எவரையும் புண்படுத்தும் விதத்திலும் நான் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளவில்லை.

இந்த நாட்டு மக்களை நாங்கள் நேசிக்கின்றோம். எங்களுடைய தேர்தல் பிரசாரம் தொடரும். ஆனால் எதுவித வன்முறையும் இனத்துவேசமும் இல்லாத விதத்தில் தேர்தல் பிரசாரத்தை கொண்டு செல்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்

எனது கருத்து தொடர்பில் நாட்டின் பல பாகங்களிலும் அரசியல்வாதிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

அது தவறான விடயம். அந்தக் காலத்தில் நடந்த விடயம் ஓர் உவமைக்காக மேடைப் பிரசாரமாக கூறப்பட்டது. ஆகவே இதை பூதாகரமாக்குவதில் எதுவித அர்த்தமும் இல்லை. எங்களுடைய அரசாங்கத்திற்கு சிங்கள மக்களின் வாக்குகளைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரம் இது. ஆகவே இதை நாங்கள் முறியடித்து வெற்றியடைவோம்.

அம்பாறை மாவட்டத்தில் நாங்கள் ஒரு தனித் தமிழ் கட்சியாகப் போட்டியிடுகின்றோம். என்னைப் பொறுத்தவரையில் எந்தவொரு கட்சியினரையோ, எந்தவொரு மத குருமார்களையோ புண்படுத்துகின்ற மாதிரி எதுவும் கதைக்கவில்லை. அதே நேரத்தில் இராணுவத்தையும் நாங்கள் குறைத்து மதிக்க விரும்பவில்லை. எங்களது இராணுவம் பல சாதனைகளைப் படைத்து, பல அனர்த்தங்கள் வருகின்ற போது மக்களை காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற இராணுவம். அந்த வகையில் நான் அதனை ஒரு நாளும் குறைத்து எதனையும் கூற வில்லை - என தெரிவித்துள்ளார்.

# கருணா மீதான பழைய முறைப்பாடு; இப்போது தூசு தட்டுகிறது பொலிஸ்

யாழ்ப்பாணம் , ஜூன் 26

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் கருணா தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையும் தற்போது பொலிஸார் கையில் எடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

2017ஆம் ஆண்டு ஒரு பொது நிகழ்வில் கருணா என்னும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆற்றிய உரை ஒன்றில் முஸ்லீம் சமூகம் தொடர்பில் மிகவும் மோசமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு அச்சுறுத்தும் தொனியில் கருத்து வெளியிட்டிருந்தார் என ஒளிநாடாவின் ஆதாரத்துடன் அப்போது ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இவ்வாறு ஆணைக்குழுவிற்கு கொண்டு செல்லப்பட்ட விடயம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

தற்போது கருணா சர்ச்சைக்குரிய கூற்றைத் தெரிவித்து அது விசாரணை வரையில் சென்றுள்ள இச்சமயத்தில் பழைய முறைப்பாட்டையும் பொலிஸார் தூசு தட்டுகின்றனர். இதற்காக அப்போதைய முறைப்பாட்டாளர் உள்ளிட்டவர்களிடம் வாக்குமூலத்தை பெறுவதற்கு பொலிஸார் தயாராகின்றனர் எனத் தெரியவந்தது.

# கிளிநொச்சி ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு









கிளிநொச்சி விவேகானந்தநகர் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் கருவறையில் இருந்த வேல், மற்றும் எழுந்தருளும்சுவாமி முருகன், வள்ளிதெய்வானை சிலைகள் என்பன திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு ஆலயத்தின் கூரை ஓடுகள் பிரிக்கப்பட்டு உள் இறங்கி இவை திருடப்பட்டுள்ளன. சிலைகளுடன் ஆலயத்தின் பயன்பாட்டில் உள்ள பல பொருகளும் திருடிச் செல்லப்பட்டுள்ளன. சுமார் பத்து லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் திருப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு பொலிஸ் தடயவியல் பிரிவினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக கருணாவை உபாயமாகப் பயன்படுத்தினோம்

## இப்படிக் கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 26

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற சமாதான காலப்பகுதியில் விடுதலை புலிகள் இயக்கத்திலிருந்து கருணா அம்மானை பிரித்தெடுத்து உபாய முறையாக பயன்படுத்தினோம். அதற்காக அவருக்கு கட்சியில் உப தவிசாளர் பதவியினையோ அமைச்சு பதவியினையோ வழங்கி உள்வாங்க வில்லை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி முக்கிய உறுப்பினர்கள் பலர் நேற்றுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவரது இல்லத்தில் சந்தித்து தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உள்ளிட்ட சமகால அரசியல் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடினர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அங்கு ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தெளிவுப்படுத்துகையில் -

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 8 மாதங்கள் கடந்துள்ளது. ஆனால் எந்தவொரு மக்கள் நலத்திட்டத்தையும் முன்னெடுக்க முடியாமல் போனது.

கொவிட் - 19 வைரஸ் தொற்று இறுதி மூன்று மாதத்திலேயே நாட்டில் பரவியது. எஞ்சிய 5 மாதங்கள் அரசாங்கம் என்ன செய்தது? நாம் முன்னெடுத்த மக்கள் நல நிவாரணங்கள் திட்டத்தை கூட அரசாங்கம் வழங்க வில்லை. இதனூடாக அரசாங்கத்தின் பொருளாதார இயலாமையே வெளிப்படுகின்றது.

ஓரிரவில் மூவாயிரம் படையினரை கொன்றுகுவித்தார் எனக் கருணா அம்மான் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தை பாதுகாக்கவே இவ்வாறானதொரு கருத்தினை தெரிவித்துள்ளார். இதனால் இராணுவ குடும்பங்கள் குழப்பமடைந்துள்ளன.

2001ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் போது விடுதலை புலிகள் இயக்கத்திலிருந்து கருணா அம்மானை பிரித்தெடுத்தோம். இதன் பின்னர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக கருணாவை உபாய முறையாக பயன்படுத்தினோம். அதற்காக அவருக்கு ஐக்கிய தேசிய கட்சியில் உப தவிசாளர் பதவியினையோ அமைச்சு பதவியினையோ வழங்கி உள்வாங்க வில்லை. - எனத் தெரிவித்தார்.

## 3முதல்வர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றபோதும் அரச அலுவலகங்களை ஒப்படைக்காத மாநகர முதல்வர்கள் தொடர்பில் பொலிஸில் முறையிட தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மாநகரசபையின் மூன்று மாநகர முதல்வர்கள் தமது உத்தியோக பூர்வ அலுவலகங்களை மீள ஒப்படைக்கவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழு கண்டறிந்துள்ளது.

2020ஆம்ஆண்டுநாடாளுமன்றத் தேர்தலில் ஐந்திற்கும் மேற்பட்ட முதல்வர்கள் போட்டியிடுகின்றனர். அவர்கள் அரச சொத்துக்களை ஒப்படைத்து விடுமுறை பெறவேண்டும் என ஆணைக்குழு அறிவித்துள்ளநிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் உட்பட இருவரே அரச சொத்துக்களை ஒப்படைத்து விடுமுறையும் பெற்றுள்ளனர் என்றும் அதே நேரம் மூவர் அவ்வாறு செயற்படவில்லை என்றும் ஆணைக்குழுவிற்கு தொடர்ந்தும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதன் காரணமாக அரச அலுவலகங்களை ஒப்படைக்காத மூன்று மாநகர முதல்வர்கள் தொடர்பிலும் பொலிஸாரிடம் முறையிட ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என அறிய வந்துள்ளது.

# கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இன்னும்உள்ளதாம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 26

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில்தற்போதுகொரோனாவைரஸின் தாக்கம் குறைவடைந்து வருகின்றமையினால், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களை உரிய முறையில் கவனிக்க வேண்டுமென அந்த சங்கத்தின் தலைவர் வைத்தியர் அனுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர், வெளியில் நடமாடும் சமயங்களில் மீண்டும் சந்தேகத்திற்கு இடமான அறிகுறிகள் காணப்பட்டால், அவர்களை மீண்டும் பரிசோதனை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியுமென தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் கொரோனா வைரஸ் காரணமாக இதுவரையில் 2007 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளக்கமறியல் கைதிகளுக்கும் வாக்களிக்க வசதி செய்யுங்கள்!

## நீதிமன்றத்தில் விண்ணப்பம்

(ந.லோகதயாளன்)

விளக்கமறியல் உள்ள கைதிகளுக்கு வாக்களிக்க வாய்ப்பளிப்பது தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழு இம்முறை விசேட கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரப்பட்டு வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள சிறைகளி 7 ஆயிரம் பேர் வரையிலானோர் விளக்க மறியல் கைதிகள் ஆவார்கள். இந்த 7 ஆயிரம் பேரும் குற்றம் சாட்டப்பட்டவர்களே அன்றி குற்றவாளிகளல்லர். குற்றவாளிகளாகக் காணாத நிலையில் அவர்களின் வாக்குரிமையை அவர்கள் பிரயோகிக்கின்றமையை உறுதிப்படுத்தும் வகையில் இந்தச் சந்தர்ப்பத்தை வழங்க ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைய விளக்க மறியலில் உள்ளவர்களும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் அதேநேரம், சிறைக் காவலர்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு அவர்களுக்கும் தபால் மூலம் வாக்களிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் எனத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு வரவுள்ளது. இந்த விடயத்தில் தற்போதைய சூழலில் விளக்க மறியல் கைதிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்க முடியாது என்றே தேர்தல்கள் ஆணைக்குழு கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வாழைச்சேனை காகித ஆலையை மீளமைக்கும் பணியில் கடற்படை



அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அமைய இலங்கை கடற்படை வாழைச்சேனை காகித தொழிற்சாலையை மீளமைக்கும் நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளை தொர்டந்து வழங்க உள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமண்டர் இசுறு சூரியபண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை காகித தொழிற்சாலை நடவடிக்கைகளுக்கு தேவையான தொழிநுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் நாட்டின் தேசிய வேலைத்திட்டங்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் கடற்படையினர் வழங்குகின்றனர் என அவர் தெரிவித்தார்.

கடற்படையின் 'மின் மற்றும் மின்னியல் பொறியியல் துறை' பிரிவினர் குறித்த தொழிற்சாலையில் உள்ள பல்வேறு பிரதான இயந்திரங்களை இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பியால் டீ சில்வாவின் ஆலோசனைகளுக்கு அமைய மீளமைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசுக்கு எதிரான வலைத் தளங்களை மௌனிக்க வைப்பதற்குப் பிரயத்தனம்

கொழும்பு, ஜூன் 26

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கத்திற்கு எதிரான சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களை மௌனிக்க வைப்பதற்கான திட்டங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பணிப்பாளர் பிரசன்ன அல்விஸ் மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் நிஹால் தல்துவ ஆகிய இரண்டு அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

கடந்த காலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நாமல் குமார என்ற நபர் தொடர்பான விவகாரத்தின் போது, அப்போதைய ஜனாதிபதியைக் கொலை செய்ய பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி நாலக டி சில்வா சதித்திட்டம் தீட்டினார் என இவர்களே குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்த நிலையில் சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சிங்கள இணையத்தளம் ஒன்று குற்றம் சுமத்தியுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் இலக்கம்1பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரங்க ஜயசுந்தர மற்றும் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் தயானந்த ஆகியோர் தலைமையில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அந்த இணையத்தளம் கூறியுள்ளது.

இதன் முதல் கட்ட நடவடிக்கையாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் தயானந்த, அரசாங்கத்திற்கு எதிரான பிரபல சமூக வலைத்தள செயற்பாட்டாளரின் வீட்டுக்கு சென்று அவர் சம்பந்தமான தகவல்களை விசாரித்துள்ளார். இந்த சமூக வலைத்தள செயற்பட்டாளர் இதற்கு முன்னர் தனது உயிர் பாதுகாப்புக் கருதி வெளிநாட்டுக்கு சென்றிருந்தவர்.

அவரது வீட்டில் தற்போது வசித்து வரும் நபர்களை அச்சுறுத்தியுள்ள பொலிஸார், வீட்டின் உரிமைப் பத்திரங்களையும் பரிசோதித்துள்ளனர். அரசாங்கத்திற்கு எதிரான சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களை எந்தத் தரப்பின் ஊடாகவாவது அச்சுறுத்தி அவர்களை மௌனிக்க செய்வது இந்த நடவடிக்கையின் நோக்கம் எனவும் அந்த சிங்கள இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# மோதல் நடந்த இடமருகே சீனா புதிய கட்டமைப்பு!

## செயற்கைக்கோள் படங்கள் மூலம் தெளிவு



அண்மையில் இந்தியா – சீனா இடையே எல்லையில் மோதல் நடந்த இடத்துக்கு அருகில் சீனா புதிய கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளதை அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்ட செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இது அணு ஆயுத நாடுகளுக்கு இடையில் உண்டாகும் விரிசல் குறித்த கவலைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது, கல்வான் பள்ளத்தாக்கின் கிழக்கு லடாக் துறையில் கட்டுப்பாட்டு வரி (எல்ஏசி) எல்லை மற்றும் ரோந்துப் புள்ளி 14 இன் நெருக்கமான காட்சியை மாக்சர் வேர்ல்ட்வியூ – 3 செயற்கைக் கோள் படம் காட்டுகிறது. இந்தப் படத்தின் படி அங்கு சீனாவின் புதிய கட்டமைப்புகள் முளைத்துள்ளன.

அமெரிக்காவின் விண்வெளித் தொழில்நுட்ப நிறுவனமான மாக்சர் டெக்னோலஜிஸ் கடந்த திங்களன்று அந்தப் பகுதியைப் படமாக்கியபோது கால்வான் நதியருகேயுள்ள குன்றின் தளத்தில் விரிவான சீனக் கட்டமைப்புகள் இருப்பது தெரிகிறது. குன்றின் அடிப்பகுதியில் உருமறைப்பு கூடாரங்கள், மூடப்பட்ட கட்டமைப்புகள் உள்ளன, மேலும் சிறிது தூரத்தில், சுவர்கள் அல்லது தடுப்புகளுடன் கட்டுமானத்தில் இருக்கும் புதிய முகாம் ஒன்று உள்ளது. இதற்குமுன்னர் அந்தப் பகுதியை ஒளிப்படம் பிடித்தபோது அது வெறுமையாக இருந்தது என்று எல்லை மோதலுக்குப் பின்பே சீனா இவ்வாறு புதிய கட்டமைப்புகளை நிறுவியுள்ளது என்றும் விவாதிக்கப்படுகிறது.

# எல்லை விவகாரத்தில் வெல்வாரா மோடி?

## ப.சிதம்பரம் கேள்வி



சீனாவுடனான எல்லை விவகாரத்தில் ஏற்கெனவே இருந்த நிலையை அப்படியே தக்கவைத்துக் கொள்ளும் விடயத்தில் மோடி அரசு வெற்றி பெறுமா என்று மக்கள் கவனிக்கிறார்கள். பா.ஜ.க தலைமையிலான அரசு இதில் வெற்றி பெறுமா? என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் கேள்வி எழுப்பினார்.

இது குறித்துத் தனது கீச்சகப் பக்கத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கல்வான் பள்ளத்தாக்கு முழுமையும் தங்களுடையது, தங்களின் இறையாண்மைக்கு உட்பட்டது என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சகமும், சீன இராணுவமும் ஆனித்தரமாகக் கோரிக்கை வைத்து, இந்திய இராணுவத்தை வெளியேறக் கூறுகின்றன. பிரதமர் நரேந்திர மோடி கூறியதற்கு மாறாக, சீன இராணுவத்தால் எல்லைகள் மாற்றப்பட்டு மீறப்பட்டுள்ளன.

எல்லையில் பறிகொடுத்த பகுதிகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதில் மோடி அரசு வெற்றி பெறுமா என மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க. தலைமையிலான அரசு மீண்டும் இந்தியாவின் நிலைப்பாட்டை உறுதிசெய்து, பழைய நிலைக்குக் கொண்டுவருமா? என்றார்.

# விண்வெளியில் தனியாருக்கு அனுமதி!

## இஸ்ரோ தலைவர் தெரிவிப்பு




விண்வெளி சார் விடயங்களில் ஈடுபடுவதற்குத் தனியாருக்கும் அனுமதி வழங்கப்படும் என்று இந்தியாவின் இஸ்ரோ விண்வெளி நிலையத்தின் தலைவர் கே.சிவன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்– செயற்கைக்கோள், ரொக்கெட் ஆகியவற்றை அனுப்புதல், அவற்றை உருவாக்குதல், விண்வெளி ஆய்வுகள் போன்றவற்றில் இனிவரும் காலங்களில் தனியார் துறையும் அனுமதிக்கப் படும்.

பிரதமர் மோடி தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது விண்வெளித் துறையில் இந்தியா வளர்வதற்கு உதவி புரியும். விண்வெளித் துறையில் தனியார் நிறுவனங்கள் திறமையாகச் செயற்பட ஊக்குவிப்பு மற்றும் அங்கீகாரம் அளித்தலுக்கான நீண்டகாலத் திட்டங்கள் இந்தியாவை முன்னணி நாடுகளுக்கான வரிசையில் வைக்கும் என்றார்.

# போலி மருந்துகளை அனுமதிக்கமாட்டோம்

## மகாராஷ்டிர உள்துறை அமைச்சர் எச்சரிக்கை



மகாராஷ்டிராவில் கொரோனா வைரஸைக் குணப்படுத்தும் மருந்து என்றுகூறிப் போலி மருந்துகளை விற்க அனுமதிக்கமாட்டோம் என்று உள்துறை அமைச்சர் அனில் தே;முக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பதஞ்சலி நிறுவனத்தின் இயக்குநர் ஆச்சார்யா பாலகிருஷ்ணா, கொரோனா நோய்க்குத் தங்கள் நிறுவனம் மருந்து கண்டுபிடித்துவிட்டது என்று அறிவித்து அந்த ஆயுர்வேத மருந்தை உட்கொண்டால் 7 நாள்களில் கொரோனா நோய் குணமடையும் என்றும் கூறினார்.

இந்த நிலையிலேயே போலி மருந்துகளை விற்பதற்கு அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் அனில் தேஷ்முக் இவ்வாறு தெரிவித்தார். இதற்கு முன்பே இந்திய மத்திய ஆயுஷ் அமைச்சகம் இந்த மருந்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தடை செய்தமை குறிப்பிடத்தக்கது.

# எல்லைப் பாதுகாப்பில் இனித் திருநங்கைகள்?

## மத்திய பாதுகாப்புப் படை பரிசீலனை

எல்லைப் பாதுகாப்பின் உயர் பதவிகளில் திருநங்கைகளை அமர்த்துவதற்கு சீமா சுரக்ஷா பல் (எஸ்.எஸ்.பி) பரிசீலனை செய்து வருகிறது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இது குறித்த இறுதி முடிவு எடுக்க இந்தியா முழுவதிலும் உள்ள படை அதிகாரிகளிடம் கருத்துக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் உள்ளிட்ட அனைத்துப் பணிகளிலும் திருநங்கைகள் தெரிவாகி வருகின்ற நிலையில், மத்தியப் பாதுகாப்புக் காவல் படைகளின் (சி.ஏ.பி.எஃப்) உயர் அதிகாரிகளான துணைத் தளபதிகள் உள்ளிட்ட பதவிகளுக்குத் திருநங்கைகள் இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே சி.ஏ.பி.எஃப்பின் அனைத்துப் படைகளின் துணை கமாண்டன்டுகளாகவும் திருநங்கைகளை அமர்த்தும்படி, மத்திய உயர் அதிகாரிகள் மற்றும் பயிற்சித்துறை அமைச்சகம் (டி.ஓ.பி.டி) சார்பில் அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# பணமும் வேண்டாம் வேலையும் வேண்டாம்

## குடும்பத்தினர் கொதிப்பு

சாத்தான்குளத்தை சேர்ந்த தந்தையும் மகனும் சிறைக்காவலில் உயிரிழந்திருந்தனர். அவர்கள் இருவரும் பொலிஸாரால் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்து உறவினர்களும், வர்த்தகர்களும், மக்களும் இணைந்து பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்திப் போராடி வருகின்றனர். இந்த நிலையில் அவர்களது குடும்பத்தில் ஒருவருக்கு அரச வேலையும், பணமும் வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் பழனிசாமி அறிவித்தார்.

இந்த நிலையில், எங்களுக்கு அரச வேலையும் வேண்டாம் அரசு அளிக்கின்ற பணமும் வேண்டாம் அவர்களை காவலில் வைத்து அடித்துச் சாவுக்குக் காரணமாக இருந்த பொலிஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்வதுதான் வேண்டும் என்று அவர்களது குடும்பத்தினர் கூறினர். குற்றம்சாட்டப்படும் பொலிஸார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யும்வரை இறந்தவர்கள் உடலை வாங்கமாட்டோம் என்று கூறிவந்த குடும்பத்தினர் தற்போது, உடல்களைப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நடந்தது...**

கொரோனா ஊரடங்கு விதிகளை மீறிக் கூடுதல் நேரம் கடையைத் திறந்திருந்ததாகச் சாத்தான்குளத்தில் கைது செய்யப்பட்ட தந்தையும், மகனும் பொலிஸ் காவலில் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

அவர்கள் இருவரும் அடித்துத் துன்புறுத்தப்பட்டு உயிரிழந்தனர் என்று அவர்களது குடும்பத்தினரும், அந்தப் பகுதி வர்த்தகர்களும் குற்றம்சாட்டுகின்றனர். உடல்நலக் குறைவால் அவர்கள் இருவரும் இறந்ததாகக் கூறுகிறது பொலிஸ் தரப்பு. இந்த நிலையில் அங்கு போராட்டங்களும், பதற்றங்களும் அதிகரித்துள்ளன.







# உக்ரைனில் கடும் மழை! 3பேர் நீரில் மூழ்கிச் சாவு

உக்ரைனில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி மூன்று பேர் உயிரிழந்தனர். பலர் தமது வீடுகளில் இருந்து வெளியேறினர்.

உக்ரைனின் மேற்குப் பிராந்தியங்களில் உள்ள கிராமங்களுக்கான தொடர்புகள் இந்த வெள்ளம் காரணமாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை பெய்ய ஆரம்பித்த மழை மூன்று தினங்களுக்கு மேலாகக் கொட்டித் தீர்த்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் 800 பேருக்கு மேல் தங்கள் இருப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டதாக உக்ரைனின் உள்துறை அமைச்சர் ஆர்சன் அவகோவ் தெரிவித்தார். உக்ரைன் அரசின் அறிக்கைப்படி 187 கிராமங்களில் உள்ள சுமார் 5 ஆயிரம் வீடுகள் இந்த வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மீட்பு நடவடிக்கைகளில் நான்கு உலங்கு வானூர்திகளும், ஒரு வானூர்தியும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

## ‘ஹுவாவி’ ஒரு ராணுவ நிறுவனம் இப்படிச் சொல்கிறது ட்ரம்ப் தரப்பு

சீனாவின் தொலைதொடர்பு சாதன நிறுவனமான ஹுவாவி தொழில்நுட்பம் மற்றும் காணொலிக் கண்காணிப்பு நிறுவனமான ஹிக்வின் உள்ளிட்ட சீன நிறுவனங்கள் சீன இராணுவத்துக்குச் சொந்தமானவை அல்லது இவை சீன இராணுவத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இதனால் இந்த விவகாரம் புதிய பொருளாதாரத் தடைகளை விதிப்பது பற்றிச் சிந்திக்கத் தூண்டியுள்ளது என்று ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்தது. மேற்படி நிறுவனங்களுக்குச் சீனாவில் இராணுவம் ஆதரவளிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது.

அமெரிக்கா - ஹுவாவி விவகாரம் சீனாவின் புகழ்பெற்ற ஹுவாவி அலை பேசி நிறுவனத்தின் நிதி முகாமையாளரான மென்ங் வன்சு கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கனடா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கோடிக் கணக்கான டொலர்களை நிதி மோசடி செய்துள்ளார் என்ற குற்றத்தை முன்வைத்த அமெரிக்காவின் நிபந்தனையிலே இந்தக் கைது இடம்பெற்றது. கைது செய்யப்பட்ட மென்ங் வன்சுவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் கனடா பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்று சீன அதிபர் எச்சரித்திருந்தார்.

பின்னர் அவர் நீதிமன்றத்தினால் பல நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனும திக்கப்பட்டார்.

## பேச்சு மேடையிலிருந்து வெளியேறியது கொசோவோ



அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் இந்த வார இறுதியில் திட்டமிடப்பட்ட சேர்பியாவுடனான பேச்சுகளில் தமது அரசு கலந்துகொள்ளாது என்று கொசோவோவின் பிரதமர் தெரிவித்தார்.

சேர்பியா ஆட்சிக்கு எதிராகப் போராடியபோது கொசோவோ ஜனாதிபதி ஹஷீம் தாசி கிட்டத்தட்ட 100 கொலைகள் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்குரியவர் என்று சேர்பிய சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அவர் போர்க்குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டதை அடுத்தே அமெரிக்காவில் நடக்கவிருந்த பேச்சுக்களில்பங்குபற்றுவதில்லை என்று கொசோவோ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கொசோவோ விடுதலை இராணுவத்தின் முன்னாள் மூத்த தளபதியாக இருந்த தற்போதைய ஜனாதிபதி தன் மீதான இந்தக் குற்றச்சாட்டுக்குப் பகிரங்கமாக பதிலளிக்கவில்லை, ஆனால், தான் எந்தவொரு போர்க் குற்றத்திலும் ஈடுபடவில்லை என்று அவர் முன்பிருந்தே மறுத்து வருகிறார்.

**சேர்பியா - கொசோவோ**

சேர்பியாவிடம் இருந்து 2008 ஆம் ஆண்டில் ஒருதலைப் பட்சமாக விடுதலையை அறிவித்த நாடு கொசோவோ. இது தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ளது. தன்னிடமிருந்து பிரிந்த மாகாணத்தைச் சேர்பியா அங்கீகரிக்கவில்லை. 2011ஆம்ஆண்டிலிருந்து பேச்சுகள் நடந்து வருகின்றன.

## தலிபான்களைக் குறிவைத்து ஆப்கானிஸ்தானில் தாக்குதல்

தலிபான்களின் நிலைகளைக் குறிவைத்து ஆப்கானிஸ்தான் இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் தலிபான்கள் 25 பேர் கொல்லப்பட்டனர் என்று ஆப்கான் அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.


ஆப்கானிஸ்தானின் பால்க் மாவட்டத்தில் உள்ள அபாத் கிராமத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானின் வடகிழக்குப் பகுதியிலுள்ள பத்ஹிஸ் மாகாணத்தில் இராணுவ சோதனைச் சாவடி ஒன்றைக் குறிவைத்துத் தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். இதில் 7 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

அதற்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதலை ஆப்கானிஸ்தான் இராணுவம் நடத்தியது என்று தெரிவிக்கப்படுகிறது. தலிபான்கள் மாத்திரமன்றி இந்தத் தாக்குதல் அருகிலிருந்த விவசாயி ஒருவரது வீட்டையும் பாதித்தது என்றும் அதில் ஒரு பெண், குழந்தை உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர் என்றும் ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



**எல்லை அலுவலகத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தபின்பு வடகொரியாவால் தென்கொரியா நோக்கி ஏவப்பட்ட பிரச்சார பலூன் ஒன்று தென்கொரியாவின் ஹொங்கியோன் பகுதியிலுள்ள மலைக்கருகே நதியில் தரையிறங்குகின்றது.**

## சர்வதிகாரத்துக்கு உரமிடுகிறது கொரோனா!



கொரோனாத் தொற்றுநோய் உலக நாடுகள் சிலவற்றில் சர்வாதிகார நடத்தை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது. இது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று முன்னாள் பிரதமர்கள், ஜனாதிபதிகள், நோபல் பரிசு பெற்றவர்கள் உட்படப் பலர் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்று பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ் செய்தி வரைந்தது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் சுதந்திரமான நடவடிக்கை, சுதந்திரமான பேச்சு, பொதுக் கூட்டம் மற்றும் பிற மனித உரிமைகளுக்குக் கொரோனாத் தொற்றுக் காலத்தில் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசியல் விமர் சகர்களை அமைதியாக்குவதற்கும் அவர்கள் மீதான பிடியை இறுக்குவதற்கும் இந்த நெருக்கடியைச் சில அரசுகள் பயன்படுத்து கின்றன என்று சுவிட்ஸ்சர்லாந்தின் ஸ்டாக் ஹோம் நகரைத் தளமாகக் கொண்டியங்கு கின்ற ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவி நிறுவனம் தெரிவித்தது.

ஜனநாயக வழியில் தெரிவுசெய்யப்பட்ட சில அரசுகள் கூட சட்டரீதியான தடைகளை நாடாளுமன்ற மேற்பார்வையைப் பொருட்படுத்தாமல் மனித உரிமைகளை கட்டுப்படுத்தும் அவசரகால அதிகாரங்களை முன்னிறுத்தி இந்தத் தொற்றுநோயை எதிர்கொள்கின்றன.

கொரோனாத் தொற்று உலகளவில் 66 தேர்தல்களை ஒத்திவைக்க அல்லது ரத்து செய்ய வழிவகுத்தது, அவற்றில் மூன்றில் ஒரு பங்கு தேசியத் தேர்தல்கள். ஏறக்குறைய 50 நாடுகள் பத்திரிகை சுதந்திரத்துக்குக் கட்டுப்பாடு விதித்துள்ளன என்ற கூறப்பட்டுள்ளது.

## உலக போதைப்பொருள் ஒழிப்பு தினம் ஜீன் 26

# போதை என்னும் சமுதாயக் கொடூரன்




1987 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தீர்மானத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஜீன் மாதம் 26 ஆம் திகதி போதைப்பொருள் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இன்று உலகத்தில் போதைப்பொருள் பாவனை என்பது பாரிய ஒரு சமூகப் பிரச்சினையாகக மாறியுள்ளது. எதிர்கால சந்ததியினருடைய வாழ்க்கையை முற்றாக சீரழிக்கின்ற ஒரு முக்கிய சக்தி போதைப்பொருளாகும். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீள முடியாமல் நிலைகுலைந்து வாழ்கின்றனர்.

சமுதாயத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் சவாலான ஒரு விடயமாகக் காணப்படுவது போதைப்பொருள் பாவனையாகும். போதைப்பொருள் பாவனை என்பது தனிநபருடைய வாழ்க்கையை மட்டும் பாதிப்பதில்லை. மாறாக அவர்களைச் சார்ந்த குடும்பம், சமூகம் வரை அதனுடைய தாக்கம் செல்வாக்குச் செலுத்துகின்றது. போதை என்கின்ற விடயம் ஒரு தனி நபருடைய வாக்கையை பாதாளக் குழியில் தள்ளுகின்ற தீய அரக்கனாகும். போதைப்பொருள் பாவனையினால் ஒரு மனிதனுக்குக் கிடைக்கின்ற விளைவு குடும்ப ஒதுக்கல், சமூதாய புறக்கணிப்பு, இறுதியில் மரணம். மனிதனது வாழ்க்கையை சீரழித்து சின்னாபின்னமாக்கும் மிக முக்கிய சக்தி போதை.



போதைப் பொருள் என்பது ஒருவருர் தனது சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தினையும், குழப்பத்தினையும் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்வதாகும். போதைப்பொருள் என்கின்ற விடயத்திற்குள் மது, ஹெரோயின்,புகையிலை, கஞ்சா, பான் மசாலா, புகைத்தல் பொருள்கள், பெத்தனால் ஊசி, இன்ஹேலர்கள் போன்ற பல உள்ளடக்கப்படுகின்றன. உலகில் சுமார் இருபது கோடி போதைப்பொருள் பவனையாளர்கள் காணப்படுகின்றனர். தவிரவும், பெரும்பான்மையாக உலகளவில் சுமார் 100 கோடிப் பேர் புகைத்தல் மூலம் போதை ஏற்றிக் கொள்கின்றனர் என்றும், 2 கோடிப்பேர் ஹெரொயின் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கின்றனர் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சிலரின் தவறான அறிமுகம் மூலமே போதைப் பொருள் பழக்கம் தொடங்க ஆரம்பிக்கின்றது. படிப்படியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த பழக்கமானது வாழ்க்கை முழுவதும் தொடர்கின்றது. பாடசாலைப் பருவத்திலோ, கல்லூரி பருவத்திலோ தீய நண்பர்களோடு ஏற்பட்ட பழக்கத்தினாலும், பொழுது போக்கிற்காகவும் அந்த பழக்கத்தை கையில் எடுத்தவர்கள் இன்று வரை மீள முடியாமல் மனதளவில் சிக்கித் தவிக்கின்றனர். அந்த பழக்கத்தினை நான் தொட்டிருக்கக் கூடாது என்று நினைத்து மனதளவில் சோர்வடைந்த நிலையிலும் பலர் காணப்படுகின்றனர்.

இந்த போதைப்பொருள் பழக்கத்திற்கு மெதுமெதுவாக் பழக்கப்பட்டு இளம்வயதிலேயே இதற்கு அடிமையாக்கப்படுகின்றனர். போதைப்பொருள் பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது நரம்பு மண்டலமாகும். மூளைக்குச் செல்லும் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக ஞாபகசக்தி குறைவடைந்து படிப்படியாக முற்றாக நினைவாற்றல் இழக்கப்படுகின்றது. சீரான இதயத்துடிப்பு பாதிக்கப்படுகின்றது. இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உயர் இரத்த அழுத்தத்தினால் நரம்பு மண்டல் பாதிக்கப்பட்டு மரணத்தை தழுவ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மேலும் சிலர் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்படுகின்றனர். உடலில் ஏற்படும் சில மாற்றங்களினால் போதைப்பொருள் பாவிப்பவர்கள் மனதளவில் தன்னம்பிக்கையை இழந்து குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களில் ஏற்படும் இந்த அவலம் குடும்பம், சமூகம் வரைத் தொடருகின்ற அவலமாக



மாறுகின்றது.

சிலரைப் பார்த்தால் குறிப்பாக கடின வேலை செய்பவர்கள் தங்களது உடல் வலியினை போக்குவதற்காகவும் போதையினைப் பாவிக்கின்றனர். இத்தகைய போதைப்பொருள் பாவனையினால் என்ன பயன் கிடைக்கின்றது என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வீணாக பணம் செலவு செய்யப்படுவதோடு சேர்த்து புறந்தள்ளுதல்களும், அவமானமுமே கிடைக்கின்றன. போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, நண்பர்கள், உறவினர்கள், வேலைத்தளங்களில் பணிபுரிவோர் போன்றவர்களிடமிருந்து பிரிக்கப்படுகின்றனர். இத்தகைய பழக்கமிருந்தால் யார்தான் அவர்களோடு சேர்த்துக் கொள்வார்கள்? அவர்களிடம் இருந்து விரிசல் நிலைமை ஏற்படும். பிறகு யோசிப்பது ஏன் என்னை அனைவரும் வெறுக்கின்றார்கள், ஏன் என்னை புறக்கணிக்கின்றார்கள் என நினைத்து மனதளவில் சோர்வடைந்து போகின்றவர்களும் உள்ளனர். ஆனால் இவ்வாறான விரிசல் ஏற்படுவதற்கு காரணம் என்னவாக இருக்கும் என்பதை யோசிக்க தவறுகின்றனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக போதைப் பொருள் பாவனையினால் அதனை பாவிக்கின்ற குடும்பத்தை சார்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய பழக்கத்திற்கு அடிமையாகியிருந்தால் அவர்களின் பெற்றோர்கள், மனைவி, பிள்ளைகள் போன்றோரின் நிலைமையும் கவலைக்கிடமாகவுள்ளது. அவர்களுடன் சேர்த்து இவர்களுக்கும் அவமானமும், புறக்கணிப்பும் ஏற்படுகின்றன. அதுமட்டுமின்றி அவர்களைச் சார்ந்த குடும்பம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. உதாரணமாக போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகிஇளமையிலேயே ஒருவர் இறந்து விட்டால் அவர்களை நம்பியிருக்கின்ற மனைவி, பிள்ளைகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது. குடும்பத்தைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான வருமானமின்மை, குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு கிடைக்காமல் போகின்றது, சரியான வழிகாட்டுதல், இல்லாமல் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது.

போதைப் பொருள் பழக்கத்தினால் படிப்பு கெடுகின்றது. தன்னோடு பழகும் நண்பர்களை இழக்கின்றனர். பணி புரிபவர்கள் போதைக்கு அடிமையாவதால் தங்களது பணியில் இருந்து நீக்கப்படுகின்றனர். இவ்வாறு வேலையை இழப்பதால் அவர்களின் பொருளாதாரம் பாதிப்படைகின்றது. பொருளாதாரம் பாதிக்கப்படுவதால் குடும்பம் வறுமை என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இவ்வாறு போதைப்பொருள் பாவனை ஒன்றன்பின் ஒன்றாக பாதிப்பை ஏற்படுத்தும் சக்தியாக மாறிவிடுகின்றது.

உலக நாடுகள் போதைப்பொருள் தடுப்புக்கு எதிராக பல நடவடிக்கைகள் எடுத்துள்ள போதிலும் அதனை முற்றாக தடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்தப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் ஏராளமானோர். அப்படிப்பட்ட இந்த கொடிய பழக்கத்தை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகள் அரசு சார்பிலும், ஏனைய அமைப்புக்கள் சார்பிலும் மேற்கொள்ளப்பட்டாலும் அதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. போதைப்பொருள் கடத்தல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதை நாம் காண்கின்றோம். போதைப் பொருள் கடத்தல்கள் மற்றும் விநியோகம் செய்பவர்களுக்கு எதிராக பல சட்டங்கள் அமுல் படுத்தப்பட்டாலும் அதனைக் கடைப்பிடிக்காது தொடர்ந்தும் அச் செயலில் ஈடுபடுவது கவலையளிக்கின்றது. ஆகவே போதையினால் ஏற்படும் விளைவுளை கவனத்தில் கொண்டு போதை யற்ற நாட்டையும், வீட்டையும் கட்டியெழுப்புவது சமூ கத்தினராகிய எமக்கு இருக்கின்ற பாரிய பொறுப்பாகும்.

**பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்**
(இக்கட்டுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழக
சமூகவியல் துறை மாணவர்)

# புதிய நாடாளுமன்றம் கூடும் திகதி ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார்!

**கொழும்பு, ஜூன் 26**

**புதிய நாடாளுமன்றம் கூடும் திகதி குறித்து ஜனாதிபதி விரைவில் அறிவிப்பொன்றை விடுப்பார். எனினும் நாடாளுமன்றம் கூட்டப்படும் திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கக்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

உலகளாவிய ரீதியில் கொவிட் –19 தொற்றுநோய் காரணமாக 17 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதன் தாக்கம் இலங்கைக்குப் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் எமது வெளிநாட்டு இருப்பு எண்ணூறு கோடி அமெரிக்க டொலர்கள் அளவிலேயே தங்கியுள்ளது. அவ்வாறு இருக்கையில் உலகளவில் 17 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் பொருளாதார துறைகளில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்றால் எமது நிலைமை எவ்வாறு இருக்கும் என சிந்திக்க வேண்டும்.

பல நாடுகளில் நிறுவனங்கள் மூடப்பட்டு ஊழியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். ஆனால் இலங்கையில் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. எனவே நாம் மிகவும் அவதானத்துடன் எமது நிலைமைகளை கையாண்டுவருகின்றோம். எவ்வாறு இருப்பினும் இந்த ஆண்டு இறுதிக்குள் மீண்டும் பழைய நிலைமைக்கு எம்மால் வர முடியும் என நம்புகின்றோம்.

எனினும் இன்னொரு நோய் தாக்கம் வராவிட்டால் எம்மால் மீள முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறு இருப்பினும் புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு – செலவு திட்டத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.



ஜனாதிபதி அரசமைப்பிற்கு அமையவும் அவருக்கு வழங்கப்படும் சட்ட ஆலோசனைக்குழு அமையவும் உரிய நேரத்தில் தேர்தல் அறிவிப்பை விடுப்பார்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தை கலைத்ததில் இருந்து ஜனாதிபதிக்கு எதிராக சகலரும் செயற்பட்டனர். நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்தனர். ஆனால் நீதிமன்றம் சகல வழக்குகளையும் நிராகரித்து ஜனாதிபதியின் செயற்பாட்டை நியாயப்படுத்தியது.

ஆகவே ஜனாதிபதி சட்ட முறைமைகளை சரியாக கையாண்டு வருகின்றார். எனவே அவர் உரிய நேரத்தில் நாடாளுமன்றம் கூடும் திகதியை அறிவிப்பார். இன்னமும் திகதி குறித்து எந்த தீர்மானமும் எடுக்க வில்லை. – என்றார்.

## மாமாங்கேஸ்வரர் உற்சவத்தில் 50 பேருக்கு மட்டுமே அனுமதி!

கிழக்கு மாகாணத்தின் வரலாற்று புகழ்பெற்ற மட்டக்களப்பு அமிர்கழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை சுகாதார நடைமுறையின் கீழ் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆலய உற்சவ காலத்தில் 50பேரை மட்டுமே அனுமதிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அமிர்கழி ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் இது தொடர்பில் ஆராயும் கூட்டம் நேற்று மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆலய வண்ணக்கர்கள், மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி, உதவி பிரதேச செயலாளர், இந்துக்கலாசார உத்தியோகத்தர், பொலிஸ் உயர் அதிகரிகள், கிராம சேவையாளர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் ஆலய வளாகத்திற்குள் எதுவித வர்த்தக நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதில்லையெனவும் ஆலய வளாகத்திற்குள் மக்கள் ஒன்றுகூடுவதற்கு அனுமதி வழங்குவதில்லையெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலயத்தின் உற்சவத்தினை ஊடகங்கள் ஊடாக ஒளிபரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஆலய நிர்வாகம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## அரசியல் கைதிகளை விடுவிக்க தகவல் திரட்டுகின்றார் கோட்டா

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 26

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பல வருடங்களாக சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது தகவல்களைத் திரட்டி வருகின்றார்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறைச்சாலைகளில் பல வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுதலை செய்வார் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குத் தெரியும். ஆனால், இதில் பெயரைப் போட்டுக் கொள்வதற்காகவே அது சம்பந்தமாக பிரதமரைச் சந்தித்து சுமந்திரன் தரப்பு பேச்சு நடத்தியது – என்றார்.

## குருநகரில் ஞாயிறன்று இரத்ததானம்

குருநகர், ஜூன் 26

குருநகர் யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையில் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள தேவையை கருத்திற் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இரத்த தான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் மதியம் 2மணி வரை குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாமில் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றி பங்குபற்றுமாறு குருதிக்கொடையாளர்களுக்கு குருநகர் யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (உ –12)

## அமெ. மிலேனியம் உடன்பாட்டில் ஒப்பமிடும் எந்த அரசிலும் வீரவன்ஸ இருக்கமாட்டாராம்

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் உடன்படிக்கையில் கைச்சாத்திடும் எந்த அரசாங்கத்திலும் அங்கம் வகிக்க போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ் தெரிவித்துள்ளார்.

மிலேனியம் சவால் உடன்படிக்கை (எம்.சீ.சீ.) அல்ல வேறு எந்த பெயரில் வந்தாலும் உடன்படிக்கையை எதிர்க்கும் தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்திற்கு மேலாக நாட்டின் நீதித்துறைக்கு பொறுப்புக் கூறாத மற்றும் இலங்கை சட்டத்தை மீறி செல்லும் நிலைமையை உருவாக்கும் உடன்படிக்கை எந்த பெயரில் கொண்டு வரப்பட்டாலும் அதனை எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கருணா அம்மானைச் சீண்டிய தவிசாளரிடமும் வாக்குமூலம்!

காரைதீவு பிரதேசசபை தவிசாளரையும் தாம் விசாரணை செய்யவுள்ளனர் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். ஆனையிறவில் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றார் எனக் கருணா அம்மான் தெரிவித்த கருத்து தொடர்பாக விசாரணை நடத்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், காரைதீவு பிரதேச சபை தலைவரையும் விசாரிக்கவுள்ளனர்.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் 'கொரோனாவை விடக் கருணா ஆபத்தானவர்' என்று தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே, கருணா இராணுவத்தினரைக் கொன்ற தகவலை வெளியிட்டார்.

இந்த நிலையில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறிலிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெறவுள்ளனர்.

இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கான பார்சல் சேவை
Hot Line: + 94115 508 508
CARGO Parcels
SRI LANKA TO EUROPE
Cargo House
+9477 341 8807 / +9478 960 8621
+9475 411 9202

காலைக்கதிர் Kalaikkathir

# மலையகத் தொழிலாளரின் சம்பள உயர்வு சாதகமாகப் பரிசீலிக்க பிரதமர் கோரிக்கை





## முடிவை சில வாரங்களில் முன்வைக்க வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 26

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் சாதகமாகப் பரீசிலித்து அடுத்த சில வாரங்களில் சிபாரிசுகளை முன் வைக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெருந் தோட்டக் கம்பனிகளின் உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்த இறுதி முடிவுகள் எடுக்கப்படும் பட்சத்தில் அது எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு இலகுவாக அமையும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளமான 750 ரூபாவுக்கு மேலதிகமாக தேயிலை விலைக்கான கொடுப்பனவு (price share supplement), உற்பத்தி ஊக்குவிப்பு (productivity incentive) மற்றும் வரவுக்கான கொடுப்பனவுகள் (attendance incentive) அடங்கலாக நாள் ஒன்றுக்கு 1000 ரூபா சம்பள உயர்வை தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விடுத்துள்ள கோரிக்கையின் பிரகாரம் கம்பனிகளுடன் நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

கொவிட் 19 தொற்று நோய் பரவல் காரணமாக உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தோட்டக் கம்பனிகள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் குறித்து இத்தருணத்தில் அவதானம் செலுத்த வேண்டுமென இலங்கை ஊழியர் சங்கம் இந்தச் சந்திப்பில் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுகளில் அமைச்சர் ரமேஷ் பதிரன, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, பிரதமரின் செயலாளர் காமினி சேனரத், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபத் தலைவர் செந்தில் தொண்டமான், பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவாவிதாரன, சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் டி.பி.ஜி குமாரசிறி, பொது நிர்வாக திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெனரல் அதுல குமார மற்றும் தோட்டக் கம்பனிகளின் உரிமையாளர்களும் கலந்துகொண்டனர்.

இ.தொ.காவின் நிதிச்செயலாளர் மருதபாண்டி ரமேஷ், முன்னாள் எம்.பி. ராஜதுரை, உப செயலாளர் பாரத் அருள்சாமி ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# கொரோனாப் பாதிப்பிலிருந்து மீள 2,790 கோடி ரூபா கடன் திட்டம்

## 13,861 வர்த்தகர்களுக்கு கிட்டியதாம்

கொழும்பு,ஜூன்26

கொவிட் - 19 நோய்த்தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு புத்துயிரளிக்கும் அவசிய தேவையினையும் அதனூடாக நாட்டில் பொருளாதார நடவடிக்கையினை ஊக்குவிப்பதையும் இனங்கண்டு மத்திய வங்கியும் இலங்கை அரசாங்கமும் 2020 மார்ச் 24ஆம் திகதியன்று அறிவிக்கப்பட்டவாறு சௌபாக்கியா கொவிட் - 19 மறுமலர்ச்சிக் கடன் வசதி என்ற பெயரில் சௌபாக்கியா (சுபீட்சம்) கடன் திட்டத்தின் கீழ் புதிய மீள் நிதியிடல் கடன் வசதியொன்றினைத் தொடங்கியுள்ளன.

மத்திய வங்கியானது இத்திட்டத்தின் கட்டம் ஷ் இன் கீழ் 13,861 கடன் விண்ணப்பங்களுக்கென 2 ஆயிரத்து 790 கோடி ரூபா தொகைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், 2020 ஜூன் 24 வரை நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட 7,274 வியாபாரங்களுக்கு, ஆயிரத்து 480 கோடி ரூபாவை ஏற்கனவே பகிர்ந்தளித்துள்ளன. இக்கடன்கள் 6 மாத சலுகைக் காலத்துடனும் 24 மாதங்களைக் கொண்ட மீள்கொடுப்பனவு காலத்துடனும் கூடிய வருடந்தம் 4 சதவீத சலுகை வட்டி வீதத்தினைக் கொண்டவையாகும்.

மேலும், திட்டத்தின் கட்டம் ஷ்ஷ் இன் கீழ், பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு வருடாந்தம் 4 சதவீத சலுகை வீதத்தில் மீள்கடன் வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு வருடாந்தம் 1 சதவீத சலுகை வீதத்தில் மேலும் ரூ. 12ஆயிரம் கோடி ரூபாவை வழங்குவதற்கு தற்போது மத்திய வங்கி ஆயத்தமாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வவுனியாவில்!



வவுனியா, ஜூன் 26

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியல் அட்மிரட் ஆனந்த பீரிஸ் நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். வவுனியா, மாமடு பகுதியில் உள்ள சிவில் பாதுகாப்பு படை முகாமுக்கு வருகை தந்த அவர் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய திட்டங்களை விரிவுபடுத்தும் முகமாக மர நடுகை நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தமையுடன் அங்குள்ள தோட்டங்களையும் பார்வையிட்டார்.

சிவில் பாதுகாப்பு படையினருடன் கலந்துரையாடி, அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். சிவில் பாதுகாப்பு துறையினரின் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துதல் சம்பந்தமாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா சிவில் பாதுகாப்பு படை பொறுப்பதிகாரி கேணல் ருவன் மில்லவான மற்றும் சிவில் பாதுகாப்பு படையின் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ம)


## மணமகள் தேவை

1986 ( ஆண் V)
ஆயிலியம் 2ம்
கி/ பா - 45
கனடா (நீர்வேலி)

1992 ( ஆண் V)
திருவாதிரை 1 ம்
8ல் செவ்வாய்
கி.பா - 64 1/4
பொறியியலாளர்
( கிளிநொச்சி)

1982 ( ஆண் V)
அனுசம் 3ம்
கி/ பா - 33 3/4
Post Pion
சண்டிலிப்பாய்

1992 ( ஆண் V)
புனர்பூசம்
கி/ பா - 45 1/4
ஆசிரியர் ( Bsc)
யாழ்ப்பாணம்

1979(ஆண் குருகுலம்)
மகம்
கி/ பா -43
2ல் செவ்வாய்
Doctor
மட்டக்களப்பு

## மணமகன் தேவை

1987 ( பெண் V)
மகம்
கி/ பா - 8 1/2
Doctor
பண்டத்தரிப்பு

1996 (பெண் V)
ரோகினி
கி/ பா - 16. 1/4
A/L
எதிர்பார்ப்பு வெளிநாடு
பண்டத்தரிப்பு

1991 ( பெண் V)
மகம்
கி/ பா - 33
12 ல் செவ்வாய்
(Bsc)
தேசிய வீடமைப்பு அ.சபை

மேலதிக தொடர்புகளுக்கு -
இமயம் திருமணசேவை
Phone - 0779929047
Viber/ What's up -
+94777243129

# வெளிநாடுகளில் சிக்கியிருந்த 9,580 இலங்கையர் மீண்டனர்

## மேலும் 52,401 பேர் நாடு திரும்பக் கோரிக்கை

கொரோனா வைரஸ் பரவலால் 117 நாடுகளிலுள்ள இலங்கையர்களில் 52 ஆயிரத்து 401 பேர் மீண்டும் நாட்டுக்கு வருவதற்கான கோரிக்கையை முன் வைத்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் கொரோனா தடுப்பு செயற்பாட்டு செயலணியுடன் இணைந்து இதுவரையில் 38 நாடுகளிலிருந்து 9 ஆயிரத்து 580 இற்கும் மேற்பட்ட இலங்கையர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று மேலும் 10 நாடுகளிலுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதற்காக ஜூன் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 07ஆம் திகதி வரையில் 10 விமானப் பயணங்களுக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மத்திய கிழக்கு மற்றும் ஏனைய இடங்களிலுள்ள இன்னல்களுக்கு உள்ளாகக்கூடிய பிரிவினருக்காக உலர் உணவு பங்கீடு, அடிப்படை மருந்து, பாதுகாப்பு உடைகள் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்துக்காக 42.6 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை இலங்கை தூதுக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொருள்கள் தட்டுப்பாடு நிலவுதல் மற்றும் உலர் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் சிரமங்கள் நிலவும் மாலைதீவு, ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளுக்கு உலர் உணவு மற்றும் மருந்து வகைகள் அடங்கிய 15.5 மில்லியன் ரூபா பெறுமதியைக் கொண்ட 5,000 பொதிகளை அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர்களின் தேவைக்காக அந்த நாடுகளில் இலங்கைக் குழுவினரால் தேவையான வகையில் இராஜதந்திர பிரதிநிதித்துவம் மேற்கொள்ளப்படுவதுடன், இலங்கையர்களுடன் தொடர்ச்சியாகத் தொடர்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கைத் தூதுக் குழு செயற்படாத நாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு இலங்கை இராஜதந்திர தூதுக்குழுவினால் தேவையான சேவைகளை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதேபோன்று இந்த உலகளாவிய கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக இலங்கைக்கு ஏற்படக் கூடிய பொருளாதார அழுத்தத்தைக் குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக இலங்கை இராஜதந்திர தூதுக்குழுவினரால் புதிய வர்த்தக சந்தைகளை அடையாளம் காண்பதற்கும் தற்பொழுதுள்ள வர்த்தக சந்தைகளில் நிலவும் கோரிக்கையை அதிகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# பாக். பிரதமர் இம்ரான் கான் கோட்டாவுக்குப் பாராட்டு

'கொவிட் 19'பரவலை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஜனாதிபதி கோட்டாபயவிற்கு தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு அவர் தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார் என இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

# 57 கிலோ கஞ்சாவுடன் டிங்கியில் இருவர் கைது



சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கேரள கஞ்சா தொகையொன்றை கடத்த முயற்சித்த இரண்டு பேர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை வடக்கு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான டிங்கி படகொன்றை சோதனையிட்ட போது அதிலிருந்து 57.275 கிலோ கிராம் கேரள கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட 33 மற்றும் 39 வயதுடைய இரண்டு சந்தேகநபர்களும், டிங்கி படகு மற்றும் கேரள கஞ்சா தொகை ஆகியவற்றுடன் மேலதிக விசாரணைகளுக்காக ஊர்காவற்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கேரள கஞ்சா தொகையின் பெறுமதி 55 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்தினுள் மாத்திரம் இது வரை 2911 கிலோ கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

# சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தமைக்காக கருணாவை விசாரிக்கக் கோருகிறது ஐ.நா.

சிறுவர்களை தமது படையணியில் சேர்த்துக் கொண்டமைக்காக கருணாவை விசாரிக்க வேண்டுமென ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமை அலுவலகம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த கால குற்றங்களுக்காக விடுதலைப்புலிகளின் முன்னாள் தளபதி கருணா விசாரிக்கப்படுவதை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம். சிறுவர்களை படையணியில் சேர்த்துக்கொண்டமை சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் குற்றச்செயலாகும். இலங்கையில் உள்ள அனைவருக்கும் பொறுப்புக்கூறல் பொருந்தும். - எனவும் தனது பதிவில் மனித உரிமை அலுவலகம் தெரிவித் துள்ளது

# வலி. மேற்கு பிரதேச சபையில் அமரர் ரங்கராஜாவுக்கு அஞ்சலி

## அவரது சேவைக்கு சபை மதிப்பளித்தது





யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளர் அமரர் சிவகுருநாதன் ரங்கராஜாவுக்கு வலி. மேற்கு பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ் மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைக்கு பிரதேச சபை மதிப்பளித்துள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் 28 ஆவது அமர்வு நேற்று வியாழக்கிழமை சபையின் மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் என்.நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பொன்னாலை வட்டார உறுப்பினர் ந.பொன்ராசா, அமரர் ரங்கராஜாவுக்கு சபையில் அஞ்சலி செலுத்த வேண்டும் என தனிநபர் வாய்மூல பிரேரணை ஒன்றை கொண்டுவந்தார்.

வாய்மூல பிரேரணை கொண்டுவந்த பொன்ராசா, தமிழர்களின் சிறந்த நிர்வாக அதிகாரியாகவும் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராகவும் இருந்த அமரர் ரங்கராஜா எமது பொன்னாலை வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்டவர். இவர் தமிழர்களுக்கு கிடைத்த சொத்து.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காத்திரமான பங்காற்றியவர். அவர் என்றும் மறக்கப்பட முடியாதவர். அவருக்கு இந்த உயரிய சபையில் அஞ்சலி செலுத்த அனுமதிக்க வேண்டும். - என கேட்டுக்கொண்டார்.

இதை சபை ஏற்றுக்கொண்டது. சபையின் தவிசாளர், செயலாளர், சபை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று அமரர் ரங்கராஜாவுக்கு இரு நிமிட அகவணக்கம் செலுத்தினர்.

தவிசாளர் என்.நடனேந்திரன் அகவணக்கம் செலுத்தி அஞ்சலி உரை ஆற்றும்போது, ரங்கராஜா ஆளுமைமிக்க சிறந்த நிர்வாக அதிகாரி. பொன்னாலை கிராமத்தில் பிறந்து வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் பணியாற்றியவர். பொன்னாலை வரதராஜப் பெருமாளில் பற்றுக்கொண்டவர். நிறைவான அதிகாரி.

தமிழர்களின் விடுதலைப் போராட்ட காலத்தில் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளுடன் நெருக்கமான தொடர்புகளை பேணியதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையாற்றியவர். உள்ளூராட்சியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பாக, முன்மாதிரியான செயற்பாடுகளை மேற்கொண்டவர்.

எமது பிரதேசத்தில், திருவடிநிலையில் ஒரு சுற்றுலா மையத்தை உருவாக்கி அதை பிரதேச சபையிடம் கையளிக்க வேண்டும் என எண்ணம் கொண்டிருந்தவர். தாம் நினைத்ததை சிறப்பாக செய்து முடிக்கக்கூடிய ஒருவர்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் சிறந்த ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கியவர். வடக்கு மாகாணத்தில் உள்ள மூத்த அதிகாரிகளோடு நெருங்கி பழகியவர். பொன்னாலை மண்ணுக்கும் வலி.மேற்கிற்கும் பெருமை சேர்த்த அவரை என்றும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். - என்றார்.

இங்கு செயலாளர் கி.விஜயேஸ்வரன் உரையாற்றுகையில், 1993 ஆம் ஆண்டு முதல் நியமனம் திருகோணமலையில் எனக்கு கிடைத்தபோது நான் அவரது அலுவலகத்தில் கடமையைப்பொறுப்பேற்றேன். அவர் அகில இலங்கை திட்டமிடல் சேவையை சேர்ந்த ஒருவர். அவருக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அவருக்கு முதல் நியமனம் கிடைத்தது.

சிறந்த ஆளுமைமிக்கவர். இவரது காலத்திலேயே வடக்கு - கிழக்கு மாகாண சபை கணினித்துறையில் முன்னேற்றம் அடைந்தது. இவரது சிறந்த ஆளுமை காரணமாக வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணம் யுத்தத்தில் மூழ்கியிருந்த காலமாகிய அப்போது, நிக்கொட், நியாப், நீர்ப், நெக்டெப் போன்ற பல வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் உதவியுடன் வடக்கு - கிழக்கில் பாரிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டவர்.

2007 இல் வடக்கு - கிழக்கு மாகாணம் தனித்தனி மாகாணங்களாக பிரிக்கப்பட்டபோது வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராகவும் அதன் பின்னர் வடக்கு ஆளுநரின் செயலாளராகவும் பதவி வகித்தவர். நாட்டுக்கு அவர் உழைத்த உழைப்பை எப்போதும் நாம் மறக்கக் கூடாது. - என்றார்.

இங்கு உறுப்பினர் ச.ஜெயந்தன் உரையாற்றுகையில், அமரர் ரங்கராஜா சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் பழைய மாணவர். பழைய மாணவர் சங்கத்திற்கும் பாடசாலையின் அபிவிருத்திக்கும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியவர்.

எளிமையான அவர் ஒரு நிர்வாக அதிகாரி மட்டுமன்றி சிறந்த அனுபவசாலி. தமிழ் அதிகாரிகள் மட்டுமன்றி தென்பகுதி அதிகாரிகளுக்கும் வழிகாட்டியாக இருந்தவர். அவரை மறக்கமுடியாது. அவரது இழப்பு ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் பேரிழப்பு. - என்றார். உறுப்பினர் பரமசிவம்பிள்ளையும் இங்கு அஞ்சலி உரையாற்றினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# தேர்தல் பிரசாரக் களத்தில் இன்று குதிக்கின்றார் ஜீவன்



பொதுத்தேர்தலுக்கான வெற்றிப்பிரச்சாரத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் இன்று ஆரம்பிக்கவுள்ள நிலையில், அவருக்கு பல தரப்பினரும் வாழ்த்துகளைத் தெரிவித்துவருகின்றமையுடன் அமோக வெற்றிக்கான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் எனவும் உற்சாகப்படுத்திவருகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தை மையமாகக்கொண்டியங்கும் இளைஞர் அமைப்புகள், விளையாட்டுக்கழகங்கள், தன்னார்வு தொண்டு அமைப்புகள், மாதர் சங்கங்கள், கல்விசார் அமைப்புகள் மற்றும் கலை, கலாச்சார ஒன்றியங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளே இவ்வாறு வாழ்த்துகூறி, இ.தொ.காவின் வெற்றிக்கு துணை நிற்கப்போகிறார்கள் எனவும் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து செயற்பட்ட சிரேஷ்ட அரசியல்வாதிகள், அமரர் ஆறுமுகன் தொண்டமானுடன் நெருங்கிய தொடர்புளை பேணியவர்களும் ஜீவன் தொண்டமானின் வெற்றிப்பயணத்துக்கு ஆசி வழங்கியுள்ளனர்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கான 30 ஆம் நாள் கிரியைகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. தந்தைக்கான கடமைகளை நிறைவேற்றிய பின்னரே, இன்றுமுதல் ஜீவன் தொண்டமான் பிரச்சாரக் களத்தில் இறங்கவுள்ளார்.

இதற்காக விசேட பூஜை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், கொழும்பில் பழைய நாடாளுமன்ற வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சௌமியமூர்த்தி தொண்டமானின் திருவுருவச் சிலைக்கு அவர் மாலை அணிவித்து ஆசிபெறவுள்ளார்.

அதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட 32 அம்ச கோரிக்கைகளை மையப்படுத்தியும், இளைஞர், யுவதிகளுக்கு மேலதிகமாக பல திட்டங்களை உருவாக்கும் நோக்கிலுமே ஜீவன் தொண்டமானின் தேர்தல் பிரச்சாரத் தொனி அமையவுள்ளது.

# புலிகளுக்கு எதிராக ஹிஸ்புல்லாவுக்கு வழங்கிய ஆயுதங்களே சஹ்ரானிடம்!

கொழும்பு, ஜூன் 26

தேசிய தௌஹீத் ஜமா – அத்தின் தலைவரான சஹ்ரான் ஹாசீம் பாரம்பரிய முஸ்லிம்களை அச்சுறுத்துவதற்காகப் பகிரங்கமாகவே துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதுடன், 2009 ஆம் ஆண்டிலேயே காத்தான்குடியிலுள்ள இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சிகளை வழங்கியதாக உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்நிலையில் தெரிவிக்கப்பட்டது.

பாரம்பரிய முஸ்லிம்களுக்கும், வஹாபிகளுக்கும் இடையிலான மோதல் குறித்து 2009 இல் சஹ்ரானைப் பேட்டி கண்ட 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையாளர் கிரிஷ் கமலேந்திரன் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

2009 ஓகஸ்டில் தான் காத்தான்குடிக்கு விஜயம் செய்தார் என ஆணைக்குழுவிடம் அவர் கூறினார்.

நான் முதலில் சூஃபி முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்தேன். சஹ்ரான் குழுவினர் சூஃபிகளுக்குச் சொந்தமான நூறுக்கும் அதிகமான சொத்துக்களைத் தாக்கிச் சேதப்படுத்தியதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள். அதற்குப் பின்னர் ஒருவரிடம் தொலைபேசி இலக்கத்தைப் பெற்று அவரை தொடர்பு கொண்டேன்.

சஹ்ரானை அவரது சிறிய அலுவலகத்தில் சந்தித்தேன். அவருடன் பேசிக்கொண்டிருந்த போது அடுத்த அறையில் ரி 56 ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்.

1990 இல் விடுதலைப் புலிகளினால் காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஊடாக ரணசிங்க பிரேமதாஸ நிர்வாகத்தின் போது காத்தான்குடியிலுள்ள முஸ்லிம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த துப்பாக்கிகளே சஹ்ரான் குழுவிற்கு வழங்கப்பட்டது.

அந்த நேரத்தில் சஹ்ரான் குழுவினர் பகிரங்கமாகவே ஆயுதங்களைப் பயன்படுத்தினர். கடற்கரையில் ஆயுதப்பயிற்சிகளை வழங்கினர். தென்னை மரங்களில் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட ஓட்டைகள் காணப்பட்டன. இவை பகிரங்கமாகவே நடைபெற்றன. பாரம்பரிய முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெற்று வந்தன.

அந்த நேரத்தில் மட்டக்களப்பின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த எடிசன் குணதிலகவிடமும் காத்தான்குடி உதவிப்பொலிஸ் அத்தியட்சர் கந்தே வசந்தவிடமும் அந்தச் சம்பவம் குறித்து நான் கேட்டேன். அதற்கு அவர்கள் தங்களுக்கு அந்தச் சம்பவங்கள் பற்றித் தெரியும் என்றும், ஆனால் அரசியல் நெருக்குதல்கள் காரணமாகத் தீவிரவாத நடவடிக்கைகளை அலட்சியம் செய்ததாகவும் கூறினார்கள். தாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால் உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருப்போம் என்றும் அவர்கள் கூறினார்கள் – என்றார்.

# யானை – மனிதர் மோதலுக்கு நிரந்தர தீர்வு காணப் பணிப்பு

## அதிகாரிகளுக்குப் பிரதமர் உத்தரவு



யானை – மனித மோதலுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் அபிவிருத்தி நிர்மாண பணிகளை முன்னெடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் நிர்மாண அபிவிருத்தி பணிகள் தொடர்பான சந்திப்பு நேற்று பிரதமர் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

முறையான திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி நிர்மாண பணிகளை முன்னெடுக்காத காரணத்தால் வன விலங்குகள் மக்கள் வாழும் பகுதிகளுக்குள் ஊடுருவுகின்றன.

இதில் யானை –மனித மோதலைப் பிரதானமாக குறிப்பிட வேண்டும். யானை மனித மோதலின் விளைவாக பாரிய இழப்புக்கள் நாளாந்தம் இடம்பெறுகின்றன.

அதனடிப்படையில் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் அபிவிருத்தி நிர்மாண பணிகளுக்கான திட்டங்களை வடிவமைக்க வேண்டும். வன விலங்குகளை பாதுகாப்பது அரசாங்கத்தின் கொள்கை.

மகாவலி அபிவிருத்தி நிர்மாண பணிகள் அதிகார சபை, மற்றும் நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையின் கண்காணிப்பில் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நிர்மாண பணிகள் மீள்பரிசீலனை செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறைந்த செலவில் மக்கள் பயன்பெறும் விதத்தில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்குமாறு பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

# மாலுமிகள் இடைமாறுவதை தடை செய்யுமாறு உத்தரவு!

கொழும்பு, ஜூன் 26

இலங்கையில் கப்பல் மாலுமிகள் இடைமாறுவதை உடனடியாக இடைநிறுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து கப்பல்களில் வரும் மாலுமிகள் தாம் பணியாற்றும் கப்பல்களுக்கு இடைமாறும் மத்தியநிலையமாக கொழும்பு துறைமுகத்தை கடந்த சில வாரங்களாகப் பயன்படுத்தி வந்தனர் எனவும் இந்தச் செயற்பாட்டையே ஜனாதிபதி நிறுத்தியுள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவ்வாறு வரும் மாலுமிகள் பலர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை இவர்களுக்கு செய்யப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே, ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# தேர்தல் முடிந்ததும் திகா, ஹக்கீம் அரசுப் பக்கம் தாவி விடுவார்களாம்

## இப்படிக் கூறுகின்றார் நவீன்



பொதுத்தேர்தல் முடிவடைந்ததும் திகாம்பரம் ஆளுங்கட்சி பக்கம் தாவிவிடுவார். ரவூப் ஹக்கீமும் அப்படிதான். தொண்டமான், திகாம்பரம் ஆகியோரிடம் நான் ஒரு போதும் தலைகுனிந்தது இல்லை. – என்று ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கினிகத்தேன பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் வாக்கு கேட்பவர்கள், தேர்தலின் பின்னர் ஆளுங்கட்சி பக்கம் தாவிவிடுவார்கள். ரவூப் ஹக்கீம் தனது சகாக்களுடன் சென்றுவிடுவார். ஜீவன் தொண்டமானுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும்போது திகாம்பரம் சும்மா இருப்பாரா? அவரும் ஆளுங்கட்சி பக்கம் சென்றுவிடுவார்.

இன்று எம்மவர்கள் சிலர் திகாம்பரம் பின்னால் திரிகின்றனர். சிங்கள வாக்குகளை காட்டிக்கொடுக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன். இங்கு எமக்கும் உரிமை இருக்கின்றது.

2001 இல் மேல்கொத்மலை திட்டத்தை முன்னெடுக்க வேண்டாம் என தொண்டமான் கூறினார். தலைகுனியவில்லை. செய்தேன். திகாம்பரத்துக்கும் அடிபணிந்தது கிடையாது. – என்றும் நவீன் திஸாநாயக்க குறிப்பிட்டார்

# காலநிலை மாற்றத்தினால் மன்னாரில் மீன்பாடு குறைவு

## மீனவர்கள் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பு

மன்னார், ஜூன் 26

மன்னார் கடற்பகுதியில் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்து உள்ளதாக மன்னார் தென் கடல் பகுதியான முத்தரிப்புத்துறை, சிலாபத்துறை மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

வழமையாக ஜூன் மாதம் நல்ல காற்று வீசும் காலமாக உள்ளது. காற்று வீசும் போது தான் ஆழ் கடல் மீன்கள் கரையை நாடி வரும். ஆனால் தற்போது காற்று வீழ்ந்து காலநிலையில் மாற்றமடைந்துள்ளமையினால் மீனவர்களுக்கு மீன்பாடு குறைவாக உள்ளது. எரிபொருள் செலவுகளுக்குக் கூட மீன்கள் கிடைப்பதில்லை. இதனால் மீனவர்கள் பொருளாதார ரீதியில் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வழமையான நாள்களில் இந்த காலப்பகுதியில் 'விளை' மீன்கள் குவிந்து கிடக்கும். தற்போது ஒரு மீனவர் படகில் இரண்டு கிலோ விளை மீன் பிடிபடுவது கடினமாக உள்ளது.

கடலில் தூர இடங்களுக்கு சென்று மீன் பிடியில் ஈடுபட முடியாது உள்ளது. 'கொரோனா' பிரச்சினையால் அரசு கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. அதுவும் மீன்பாடு குறைவாக உள்ளமைக்கு முக்கிய காரணமாக உள்ளது. – என மன்னார் தென் கடல் மீனவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.06.2020 இல் வெளியிடப்பெற்றது.

# தினம் ஒரு தலைப்பு



மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

# சித்திரப்போட்டி



படம் 1
டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி



படம் 2
லோ. சிவயாணு - தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

நேற்றைய தினம் அதிகளவானமாணவர்கள் 'உலங்கு வானூர்தி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத் தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'மாட்டு வண்டி'**

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

அஸ்ரிகா பைசர் – ஆரம்ப உயர்தரம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

பை. ஹண்சிகா – தரம் 4
யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ராமதாசன் ஹர்சிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

எம். பிரார்த்தனா – தரம் 7
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

எம். யாகவி – தரம் 7
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

கு. கிஜானிகா – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

வி. ரிதீஷிதன் – தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ஆர். பிரிதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கே. நிருஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

யஸ்மின் யசோதரன் – தரம் 3
Woodpecker Hall Primary Acadamy, London

ஏ. ஜெசூரன் – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கு. கஜோரிகா – தரம் 5
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஏ. அனன்யா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ அக்ஷயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

கி. அஸ்வதா – தரம் 4
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அவிஷிகன் விமலானந்தன் – தரம் 1
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

அபர்ணா உதயகுமார் – தரம் 6
David Leeder Middle School, Canada.

அத்வைதா ஹோபிநாத் – தரம் 1
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

கி. துஷாந்த் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

காலைக்கதிர் Kalaikathir

மாட்டு வண்டி



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

**இன்று (26/06/2020) தலைப்பு**
**மாட்டு வண்டி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**